# வல

Valampurii

பக்கங்கள் : இருபது

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 14 வியாழக்கிழமை (29.11.20.

# பொலிஸார் மூர்க்கம் ரணகளமானது பல்கலைக்கழகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணிமீது கலகமடக்கும் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மூர்க்கத் தனமான தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதல் நேற்று மதியம் ஒரு மணியளவில் இடம்பெற்றது. இதன் போது இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து மாணவர்கள் மீது மிகவும் மோசமான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இதனால் சில மணி நேரம் பல்கலைக்கழக பிரதேசம் ரணகளமாக காட்சியளித்தது. (20ஆம் பக்கம் பார்க்க)


(படம் : அலுவலகச் செய்தியாளர்)

மாணவன் மீது பாயும் கலகமடக்கும் பொலிஸார்

## வலம்புரிச் செய்தியாளர் மீது படையினர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நேற்றைய தினம் செய்தி சேகரிக்கச் சென்ற வலம்புரியின் செய்தியாளர் உதயராசா சாளின் படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன், வலம்புரிச் செய்தியாளர் எஸ்.இராஜேஸ்கரன் அங்கிருந்து படையினரால் விரட்டப்பட்டார்.

பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தைப் படையினர் தடுத்து நிறுத்திய வேளை செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த வலம்புரிச்செய்தியாளர் சாளினை அழைத்த படையினர்,

அவரிடமிருந்து புகைப்படக் கருவியை கேட்டு அவரைக் கடுமையாகத் தாக்கியதுடன் அவர் வைத்திருந்த செய்தியாளருக்கான அடையாள அட்டையையும் கிழித்தெறிந்தனர். (20ஆம் பக்கம் பார்க்க)


காயமடைந்த மாணவர்களை பார்வையிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர்.

## அனுமதியின்றி ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களையே விரட்டினோம்

### பொலிஸார் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரின் அனுமதியின்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் வீதியில் இறங்கி ஊர்வலம் செல்ல முற்பட்டதை அடுத்தே அவர்களை பொலிஸார் அங்கிருந்து கலைத்தனர் என்று யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

மாணவர்களைத் தடுக்க முற்பட்ட போது அவர்கள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனையடுத்து பேரணியில் ஈடுபட முயற்சித்தவர்களை பொலிஸார் கலைக்க முற்பட்டனர்.

அதற்கு செவி சாய்க்காத மாணவர்கள் அமைதியை சீர்குலைக்கும் வகையில் நடந்து கொண்டனர். இதனால் அவர்களை பலவந்தமாக விரட்டியடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இதனையடுத்தே பொலிஸார் தடியடிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என எரிக் பெரேரா கூறினார்.

இதேவேளைமாணவர்களை (20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சொத்துக்கள் 10ஆயிரம் கோடி ரூபாய்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு சொந்தமான வெளிநாட்டுச் சொத்துக்களின் பெறுமதி ஒரு பில்லியன் டொலர்கள் (10ஆயிரம் கோடி ரூபாய்) என விடுதலைப்புலிகளின் அமைப்பின் ஆயுத விநியோக வலையமைப்பின் முன்னாள் தலைவர் கே.பி. என்ற குமரன் பத்மநாதன் இலங்கை அரசாங்கத்திடம் தெரியப்படுத்தி (20ஆம் பக்கம் பார்க்க)

## 2 மாணவிகள் உட்பட 40 மாணவர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் நேற்றையதினம் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 40க்கும் மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்ததாக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதில் இரண்டு மாணவிகள் உட்பட 7பேர்யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனையவர்கள்பயம்காரணமாக வைத்தியசாலைக்குச் செல்லவில்லை என தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் கலைப் பீடத்தைச் சேர்ந்த 5 மாணவர்களும் முகாமைத்துவ பீடம் மற்றும் கலைப் பீடத் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைகழக மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இன்றும் நாளையும் வகுப்பு பகிஷ்கரிப்பினை மேற்கொள்ள தீர்மானித்துள்ளனர் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று அறிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற கலவரத்தினையடுத்தே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்தது.

பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்தும் மாணவர்களின் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்தேவி மோதி 6 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து ஓமந்தை நோக்கி சென்றுகொண்டிருந்த யாழ்தேவி புகையிரதத்துடன், முச்சக்கர வண்டி ஒன்று மோதியதில் சம்பவ இடத்திலேயே 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

மஹறாவ-அம்பன்பொல-ரன்தெனிகம புகையிரத கடவையில் நேற்று காலை 9.10 (20ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலை கண்டித்து போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமாணவர்கள்மீது இராணுவத்தினரும் பொலிஸாரும் மேற் கொண்ட தாக்குதலைக் கண்டித்து எதிர்வரும் 4-ம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். நகரப்பகுதியில்கண்டனபோராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இதற்கான அழைப்பை வெளியிட்டுள்ளது. இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தின் முன் நேற்று அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் மீது இராணுவத் தினரும், காவல்துறையினரும் இணைந்து கண்மூடித்தனமாக தாக்குதலை நடத்தியுள்ளனர். அத் தாக்குதலில் பெருமளவு மாணவர்களும் மாணவிகளும் காயமடைந்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் முன் நேற்று அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் மீது இராணுவத்தினரும் காவல் துறையினரும் இணைந்து கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தியுள்ளனர். அத் தாக்குதலில்பெருமளவுமாணவர்களும்மாணவிகளும் காய (20ஆம் பக்கம் பார்க்க)

## தீபம் ஏற்ற நேற்றும் தடை

(யாழ்ப்பாணம்)

கார்த்திகைத் தீபத்திருநாளான நேற்றையதினம் யாழில் பரவலான இடங்களில் தீபமேற்றுவதனை படையினர் தடை செய்தனர்.

கொட்டடி, அரியாலை, ஆனைக்கோட்டை, குருநகர், கோண்டாவில் போன்ற இடங்களிலும் யாழ்.நடைபாதை வியாபார நிலையங்களிலும் கார்த்திகை தீபமேற்றி வழிபாட்டில்ஈடுபட்டபலரும்இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டதோடு தீபங்கள் ஏற்றிய சுட்டிகளினையும் அடித்து நொருக்கியதோடு சப்பாத்து கால்களினால் மிதித்தும் உடைத்ததாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவத்தினர் இவ்வாறு தீப (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பியின் வாகனம் தாக்குதலுக்குள்ளானது



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் வாகனம் மீது இனம் தெரியாத நபர்களினால் நேற்று கல்லெறித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தையடுத்து அப் பகுதிக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனத்தின் மீது இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களினால் இந்தத் தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இராம்நாதன் வீதியில் பல்கலைக் கழகத் திற்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த வாகனத்திற்கு இராணுவத்தினர் பார்த்துக் கொண்டிருக்க இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வாகனத்தின் கண்ணாடியை குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது இந்தத் தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தவிர நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்பட வேண்டிய மரியாதையினையும் கொடுக்க மறுத்த இராணுவத்தினரும் பொலிஸாரும் அவரை உதாசீனப்படுத்தியதோடு அவமானப் படுத்தி அவ்விடத்தை விட்டு உடனடியாக் வெளியேறுமாறும் பலவந்தப்படுத்தி வாகனத்தில் ஏற்றியுள்ளனர். (எ-6)

## நல்லூர்க் கோட்ட அதிபர்களுக்கு


(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இக்கூட்டத்தில், பாடசாலையில் கணனி மூலம் தகவல் பேணுகின்ற ஆசிரியரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு நல்லூர்க் கோட்டக் கல்வி பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா அறிவித்துள்ளார். (ந)

ஆசிரியர் முத்துலிங்கத்தின்
EASY ENGLISH
விபரங்கள் + பெயர்பதிவு : 773212711 மூலம்
(936)



நேற்றைய தினம் சூரியனை கைத்தொலைபேசியின் கமரா மூலம் படம் பிடித்தபோது ...

# 13-வது திருத்தச் சட்டத்தை நீக்க இடமளியோம் -ஹக்கீம்



13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளாது என அக்கட்சியின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் 13வது திருத்தத்தை நீக்க வேண்டும் என்கின்றனர்.

எனினும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது என அவர் குறிப்பிட்டார்.

இவர்களின் நிலைப்பாட்டிற்கு எதிரான கட்சித் தலைவர்கள், ஆளும் அரசாங்கத்தினுள் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் கைகோர்த்து வருவதாகவும் அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

இஸ்லாமிய புத்தாண்டை ஒட்டி நடத்தப்பட்ட முஹர்ரம் போட்டி நிகழ்வுகளில் வெற்றிபெற்ற காலி அலிப் மத்ரஸா மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச ஆகியோர் கூறிவருவதைப் போல அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை. ஆதரவாக கை உயர்த்தப் போவதுமில்லை.

அதிகாரம் பன்முகப்படுத்தப்பட வேண்டும். அதிகாரப் பரவலாக்கத்திற்கும் பகிர்விற்கும் ஊடாக கொழும்புக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த அதிகாரம் மாகாணங்களும் பகிர்ந்தளிப்பட்டுள்ளது.

இந்த செயல்பாடு நாட்டின் சிறுபான்மை மக்களுக்கு பயனளிக்கக்கூடியவாறு 13 -வது திருத்தத்திலேயே உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அது இந்தியாவின் தலையீட்டுடன் ஏற்படுத்தப்பட்டது என்ற காரணத்தினால் பல்வேறு விமர்சனப் பார்வை இருந்து வருகிறது என்றார். (எ-11)

## ஊவா பல்கலையின் தகுதிகாண் பரீட்சை

ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தின் 2011-2012 கல்வி ஆண்டுக்கான புதிய மாணவர்களை உள்வாங்குவதற்கான தகைமைக் காண் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இதில் வடபகுதி மாணவர்களுக்கான பரீட்சை யாழ்.பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் டிசம்பர் முதலாம் திகதி மற்றும் 2-ம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் டிசம்பர் முதலாம் திகதி நடைபெறவுள்ள பொது உளச்சார்பு பரீட்சைக்கு அனைத்து பாட கற்கை மாணவர்களும் தோற்ற வேண்டியது கட்டாயமாகும்.

மேலும் பரீட்சை நேரத்திற்கு அரை மணி நேரம்முன் கூட்டியதாகவே மாணவர்கள் பரீட்சை மண்டபத்திற்கு வருகைதந்து தமது அடையாளங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு ஊவா பல்கலைக்கழக விரிவுரையாளர் மா.ரூபவதனன் அறிவுறுத்தியுள்ளார். (ந-8)

குழந்தையின்மையா? கவலை வேண்டாம்

உயிரணுக்கள் உற்பத்தியின்மை/ குறைவு- முழுமையாக குணமடைய

உலகிலேயே NO:1 வைத்தியம்



குழந்தையின்மை: குழந்தையின்மைக்கு ஆண், பெண் இருவரும் காரணமாகின்றார்கள். பெண்கள் 50 சதம் காரணம் என்றால் 40 சதம் ஆண்களே காரணமாகின்றார்கள். 10 சதம் இருவரும் குழந்தை வேண்டாம் என்று இருப்பது. இதில் கணவன்,மனைவி இருவரும் ஒரு நாளைக்கு பலமுறை முழுமையான தாம்பத்திய உறவில் ஈடுபட்டு வந்தாலும் ஆண்களிடமிருந்து வெளியாகும் விந்துவில் 60%க்கும் மேல் உயிரணுக்கள் இருந்தால் மட்டுமே ஒரு பெண்ணை கருத்தரிக்கச் செய்ய முடியும். ஆனால் 60%க்கும் குறைவாக இருந்தால் கருத்தரிக்கச் செய்ய முடியாது. இப்படிப்பட்ட ஆண்களுக்கு உயிரணுக்கள் உற்பத்தியின்மை/குறைவு போன்ற பிரச்சனைகளுக்கு 100 சதம் உத்தரவாதத்துடன் குணமடைய சிகிச்சையளிக்கப்படுகின்றது. இது போன்று பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப்பை பிரச்சனை மாதப்பிரச்சனைகளிலிருந்தும் முழுமையாக குணமடைந்து குழந்தை பாக்கியம் பெறுவது உறுதி. பல நடிகைகள் எங்களிடம் சிகிச்சை பெற்று அழகான, இயற்கையான, கட்டுக்கோப்பான உடலமைப்பைப் பெற்றுள்ளனர். இந்த மருந்துகள் அனைத்தும் அரசு ஆய்வுகூடத்தில் பரிசோதனை செய்த பின்பே சிகிச்சைக்குத் தரப்படுகின்றது. எனவே 100 சதம் பக்கவிளைவுகள் கிடையாது. சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr. G.ஜெகதீஸ்குமார் அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சனைகளிற்கும் டொக்டர்.டி.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் (பெண்கள் மட்டும்). 0091 9600336009


செல்: 0091 9842457673

(ச-1635)

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.
E-mail: sridevisiddha@gmail.com

# மரண அறிவித்தல்

## பிரியந்தி குகதாசன்



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பிரியந்தி குகதாசன் 27.11.2012 (செவ்வாய்க் கிழமை) அகால மரணமானார்.

அன்னார் அச்சுவேலியைச் சேர்ந்த் காலஞ்சென்ற தம்பிமுத்து - செல்லாச்சி (பிரான்ஸ்) தம்பதியினர் மற்றும் தொல்புரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - செல்வரத்தினம் தம்பதியினர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் குகதாசன் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), விஜிதா (ஓய்வுபெற்ற ஆசிரியை-யா/காட்டுப்புலம் அ.மி.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்பு மகளும் குகப்பிரியா (பிரியா-கனடா), குகப்பிரசாத் (பிரசாத்-கனடா) ஆகியோரின் பாசமிகு தங்கையும் சுரேஸ்குமார் (கனடா) அவர்களின் மைத்துனியும் விதுஷி (கனடா) அவர்களின் சிறிய தாயும் காலஞ்சென்ற கணேஸ் (அச்சுவேலி), துரைராசா (கனடா) யோகநாதன் (அச்சுவேலி), நவரட்ணராஜா(பிரான்ஸ்), லலிதா (ஆசிரியை - யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), சுபிதா (விரிவுரையாளர் -தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா), ஆகியோரின் பெறாமகளும் மகேஸ் வரி (கனடா), ஜெயபவானி (பிரான்ஸ்), ஸ்ரீதாமோதரராஜா (ஸ்ரீராஜ் J.P), ஸ்ரீஸ்கந்தராஜா (கணேஸ் மில், அச்சுவேலி), ஸ்ரீகரன் (கரன்-வெல்டிங் வேக்சொப், கோண்டாவில்), ஸ்ரீரஞ்சன் (கிராமசேவையாளர் - J/171), ஸ்ரீரவீந்திரா (பெரதேனியா பல்சிகிச்சை அகம்- யாழ்ப்பாணம்) ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை பி.ப 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

(1061).

தகவல்:
குடும்பத்தினர்
குகதாசன் - விஜிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பக்தர்கள் மூன்று விதம்

ஒரு ஊரிலே பெரியவர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு கோடீஸ்வரர்.

அவர் பல நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருந்தார்.

அவரைத்தேடி பலர் வருவார்கள். இவரும் தன்னால் முடிந்த உதவிகளை அவர்களுக்குச் செய்து கொண்டு வந்தார்.

ஒருநாள் மூன்று பிச்சைக்காரர்கள் இவரைத் தேடி வந்தார்கள்.

இவரிடமிருந்து ஏதாவது பொருளுதவி பெற வேண்டும் என்று நினைத்துத்தான் அவர்கள் வந்தார்கள்.

ஆனால், இம்மூவரும் ஒரே நேரத்தில் வரவில்லை; தனித்தனியாகவே வருகை தந்தனர்.

முதல் பிச்சைக்காரன் காலையில் வந்தான்.

அவன் கோடீஸ்வரனின் முன்னால் வந்து நின்று; "ஐயா! எனக்கு ஐந்து ரூபா வேண்டும்... தயவு செய்து கொடுங்கள்" என்று கேட்டான்.

இவன் இப்படியாகக் கேட்டதும் அவருக்குக் கோபம் வந்து விட்டது.

"என்ன இது? நான் ஏதோ உன்னிடம் கடன்பட்டிருப்பது போலவும்... நீ அதைத் திருப்பிக் கொடு" என்று கேட்பது போலவும் இவ்வளவு அதிகாரத்தோடு பிச்சை கேட்கிறாயே?... எவ்வளவு துணிச்சல் உனக்கு... உனக்கு ஐந்து ரூபா தர முடியாது. இந்தா... இரண்டு ரூபாய்... எடுத்துக்கொண்டு ஓடு" என்று கூறி அவர் இரண்டு ரூபாயைத் தூக்கி எறிந்தார்.

பிச்சைக்காரனும் அதை எடுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றான்.

அடுத்தபடியாக பகல்வேளையில் ஒரு பிச்சைக்காரன் வந்தான்.

இவன் கோடீஸ்வரிடம்; "ஐயா... நான் மூன்று நாட்களாக ஒரு வேளை உணவு கூட சாப்பிடவில்லை... தயவு செய்து எனக்கு உதவி செய்யுங்கள்" என்றான்.

"உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்?" என்று அவர் கேட்டார்.

"நீங்களாகப் பார்த்து எவ்வளவு கொடுத்தாலும் அது எனக்குப் போதும்" என்று பிச்சைக்காரன் கூறினான்.

அவர், "இந்தா பத்து ரூபா... இதை வைத்துக்கொள்... ஏதாவது வாங்கிச் சாப்பிடு" என்றார்.

அவன் அந்த பத்து ரூபாவை வாங்கிக் கொண்டு போய் விட்டான்.

அதன்பின்னர் மாலையில் மூன்றாவது பிச்சைக்காரன் வந்தான்.

இவன் கேட்ட விதம் எப்படி தெரியுமா?

"மகாராஜா! உங்களுடைய உயர்ந்த குணத்தைப் பற்றி நான் நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால் உங்களைத் தரிசித்து விட்டுப் போகலாமென வந்துள்ளேன். தர்மவழியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள்தான் கண்கண்ட தெய்வம்" என்றான்.

உடனே அந்தப் பெரியவர் என்ன சொன்னார் தெரியுமா?

"ஐயா! தயவு செய்து அமர்ந்து கொள்ளுங்கள்... நீங்கள் களைத்துப் போய் வந்திருக்கிறீர்கள். முதலில் வயிராற சாப்பிடுங்கள்... ஏனையவற்றை பின்னர் பேசலாம்" என்று கூறி அவனை அமர வைத்து உணவு வழங்கினார்.

அவன் சாப்பிட்டு முடிந்த பின் கோடீஸ்வரர் அவனிடம் "இப்போது சொல்... நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?" என்று வினவினார்.

அவரது அன்புக்கு அந்தப் பிச்சைக்காரன் மனம் நெகிழ்ந்து, "ஐயா... பசியோடு வந்தேன்... நீங்கள் அறுசுவை விருந்தே படைத்து விட்டீர்கள்... எனக்கு அதுபோதும். நீங்கள் என் மீது காட்டும் அன்பை ஒரு போதும் மறக்கமாட்டேன். உங்களுக்கு எதுவித குறையும் வராது" என்று கூறினான்.

இவனுடைய அன்பான வார்த்தைகள் அரசனுடைய மனதைத் தொட்டன. பிச்சைக்காரன் மீது அரசனின் அன்பு பல மடங்காயிற்று.

அதன் விளைவு என்ன தெரியுமா?

"இதோ பார்... இனிமேல் நீ வெளியில் எங்கேயும் போக வேண்டாம்... இங்கேயே இருந்து விடு" என்று அவர் தெரிவித்தார்.

தனது அரண்மனைக்கு அருகில் ஒரு வீட்டை அமைத்து கடைசி வரையிலும் அன்பாக வைத்து பராமரித்தார்.

இந்தக் கதையின் கருத்து என்ன தெரியுமா?

இறைவன் அந்தக் கோடீஸ்வரர் போன்றவராம். அந்த மூன்று வகை பிச்சைக்காரர்களும் மூன்று வகையான பக்தர்களாம்.

இன்றைக்கு இருக்கும் பக்தர்கள் எல்லோரும் இந்த மூன்று வகையில் ஏதாவது ஒரு வகையைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.

முதல் வகைதான் அதிகமாக இருக்கும். மூன்றாவது வகை மிகவும் அபூர்வம்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கோரல்

(பூந்தோட்டம்)

வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் எதிர்வரும் ஆண்டுக்கான புதிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்லூரியின் அதிபர் வை.சத்தியநாதன் தெரிவித்தார்.

எந்திரவியல்சார் கைப்பணியாளர் பயிற்சிக்கான தேசிய சான்றிதழில் இலத்திரனியல் (தமிழ்- இரண்டு வருடம்), மின்னியல் (தமிழ்- இரண்டு வருடம்), மோட்டார் வண்டி முச்சக்கரவண்டி திருத்துதல் (தமிழ் - ஒரு வருடம்), வாயு மற்றும் வில் உருகி ஒட்டுநர் (தமிழ்- ஒரு வருடம்), குளிரூட்டல் மற்றும் வரிச் சீராக்கல் (தமிழ்- ஒரு வருடம்), நிர்மாண தள மேற்பார்வையாளர் (தமிழ்- ஒரு வருடம்) ஆகிய பயிற்சி நெறிகளும் வர்த்தக கற்கை நெறிகள், கணக்கீடு தொழில்நுட்பவியலுக்கான தேசிய சான்றிதழ் (தமிழ்- இரண்டு வருடம்), சுருக்கெழுத்து, தட்டெழுத்து மற்றும் கணனியில் தேசிய சான்றிதழ் (தமிழ்- ஒரு வருடம்), சந்தைப்படுத்தலில் தேசிய சான்றிதழ் (ஆங்கிலம்- ஒரு வருடம்), வர்த்தகம், கைத்தொழில் மற்றும் தொடரும் ஆங்கில கல்வியில் தேசிய சான்றிதழ் (ஆங்கிலம்- ஒரு வருடம்) ஆகிய பயிற்சி நெறிகளும் தொழில் தேடுவோருக்கான தொடர்பாடலில் ஆங்கில கற்கை நெறி (ஆறு மாதம்), அடிப்படை ஆங்கில கற்கை நெறி ( 3 மாதம்), தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தேசிய சான்றிதழ் ( ஆறு மாதம்), கணனி வன்பொருளுக்கான தேசிய சான்றிதழ் (ஆறு மாதம்) ஆகிய முழு நேர குறுங்கால கற்கை நெறிகளும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தேசிய சான்றிதழ் (ஆறு மாதம்), வர்த்தகம், கைத்தொழில் மற்றும் தொடரும் ஆங்கில கல்வியியல் தேசிய சான்றிதழ், தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழ், குடிசார் எந்திரவியல் (மூன்று வருடம்), தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழ் மின்னியலும் இலத்திரனியலும் (மூன்று வருடம்), தொழில்நுட்பவியலும் தேசிய சான்றிதழ் கணிய அளவையியல் (மூன்று வருடம்), கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ் (இரண்டு வருடம்), சுருக்கெழுத்து, தட்டெழுத்து மற்றும் கணனியில் தேசிய சான்றிதழ் (ஒரு வருடம்), ரக்டர் 4 சக்கரம், விவசாய உபகரணம் திருத்துநர் (டீசல் மெக்கானிக்- ஒரு வருடம்) ஆகிய பகுதி நேர பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

புதிய பயிற்சிகளுக்கான போதிய விண்ணப்பங்கள் கிடைக்கும் பட்சத்தில் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அத்துடன் அடிப்படை ஆங்கில 'கற்கைநெறிகளுக்கு க.பொ.த. (சா/த) பரீட்சை முடிவுற்ற மறுநாள் அனுமதி வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

விண்ணப்பங்களை அனுப்புவோர் தாம் விரும்பும் அனைத்து பயிற்சிக்கும் விண்ணப்பிக்கலாம் என்பதுடன் விண்ணப்பங்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி இற்கு முன்னர் அனுப்புமாறும் மேலதிக விபரங்களுக்கு 024 222 3664, 024 222 6720 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார். (அ-9-266)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 160 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 120-140 | 110 | 130 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 150 | 230 |
| தக்காளி | -- | 100 | 70 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30-35 | 30 | 30 | 40 |
| கோவா | 80 | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 100 | 90 | 160 |
| பூசணி | 60 | 60 | 50 | 60 |
| புடோல் | 50 | 40 | 40 | 80 |
| வாழைக்காய் | 60-80 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 100 | 160 | 80 | 160 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 | 50 | 70 |
| பயற்றங்காய் | 60-90 | 100 | 60 | 90 |
| லீக்ஸ் | 100 | 90 | 70 | 120 |
| பீற்றூட் | 40 | 100 | 40 | 160 |
| கறிமிளகாய் | 200 | 160 | 120 | 160 |
| முருங்கைக்காய் | -- | 280 | 80 | -- |
| போஞ்சி | -- | 200 | 70 | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 120 | 80 | -- |
| கீரை - 1 பிடி | 10-12 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 150 | 180 | 160 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 40 | 36 | 30-35 |

# இராசி பலன்

*29.11.2012*
*(கார்த்திகை 14, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.13 மணிக்கு*
*பிரதமை முன்னிரவு 10.32 மணிவரை*
*ரோகிணி மாலை 6.00 மணிவரை*
*இராகுகாலம் 1.44-3.14 மணிவரை*
*சுபநேரம் 7.44-9.14 மணிவரை*
*விநாயகர் விரதாரம்பம்.*

**மேடம்** துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், இனிமையான செய்திகள் இல்லம் தேடி வரலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்** குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், எந்த வேலையையும் உடனுக்குடன் செய்யும் எண்ணம் தோன்றும்.

**மிதுனம்** விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவது நல்லது, பயணத்தால் பலன் கிடைக்கும், வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவிகள் கேட்டு தொந்தரவு கொடுக்கலாம்.

**கடகம்** வருமானம் பெருகி வளம் காணும் நாள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரலாம்.

**சிங்கம்** தொட்ட காரியம் துளிர்விடும் நாள், உற்சாகத்துடன் பணி புரிந்து பாராட்டுக்களைப் பெறுவீர்கள், வெளிநாட்டுத் தொடர்புகள் அதிகரிக்கும், அந்நியர் உதவியுண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி** பற்றாக்குறை அகன்று பண வரவு கிடைக்கும் நாள், தொழில் நிமித்தம் திடீர் பயணங்கள் ஏற்படலாம், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், தந்தை வழி உறவில் நன்மையுண்டு.

**துலாம்** வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்து செல்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், வரவும் செலவும் சமமாகும், மனதில் அமைதிக் குறைவான சிந்தனைகள் தோன்றி மறையும்.

**விருச்சிகம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், வருமானம் திருப்தி தரும், கூட்டாளிகள் மூலம் நல்ல தகவல்கள் கிடைக்கலாம், செய்தொழில் விருத்தியுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், மூத்தவர்களால் ஏற்பட்ட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள்.

**மகரம்** பிள்ளைகளால் பெருமையான செய்திகள் வந்து சேரும் நாள், மறைமுகப் போட்டிகள் மாறும், செய்தொழிலில் மேன்மையுண்டு, உயர்வும் கிடைக்கும், உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரும்.

**கும்பம்** புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறும், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், வாகன சுகமுண்டு.

**மீனம்** உடன்பிறப்புக்களின் ஆதரவு பெருகும் நாள், வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரலாம், பணப்புழக்கம் இருந்த போதிலும் திடீர் விரயங்களும் அதிகரிக்கும், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில்
# நாற்பது வருடங்களுக்கு மேலாக பல வீதிகள் புனரமைக்கப்படவில்லை

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள அச்சுவேலி மேற்கு பகுதியில் உள்ள கைத்தொழில் பேட்டை வீதி, அருள்நந்தி பாடசாலை வீதி, நாகதம்பிரான் வீதி, அரசடி வீதி, இந்து மயான வீதி, கும்பப்புல வீதி, கிழவன் புல வீதி, யோண்ராஜா வீதி, அரசடி வீதி என்பன கடந்த 40 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமையால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இவ் வீதிகளில் பெரும் கற்கள் காணப்படுவதாக அப் பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேலும் மழை காலத்தில் வெள்ளமும் தேங்கி நிற்பதாகவும் குறிப்பிடுகின்றனர். இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள் முதல் பொதுமக்கள் வரை பயணிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியில் பிரபல கைத்தொழில் பேட்டை ஒன்று அமைந்திருக்கும் நிலையில் இவ் வீதிகள் புனரமைக்கப்படாதுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. இது தொடர்பாக பலமுறை உரிய தரப்பினருக்கு தெரிவித்தும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, உரிய தரப்பினர் இதனைக கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-134)



நன்றி: மிரர்

## பிணக்கு தீர்க்கும் விசேட கூட்டம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக் கேணி உணவத்தை கண்ணகை அம்மன் ஆலயத்தின் பிணக்கு தீர்க்கும் விசேட கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெறவுள்ளதாக வெற்றிலைக்கேணி கிராம அலுவலர் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்திற்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் திருலிங்கநாதன், மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனை கலாசார உத்தியோகத்தர் , சில அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொலிஸார் என பல தரப்பட்டவர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இந்த ஆலயத்தில் பங்குள்ள அனைவரையும் அம்பாள் பக்தர்களையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-64)

## அனுமதியட்டை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. சாதாரண பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வழங்கப்படும்.

எனவே, மாணவர்களை அடையாள அட்டை அல்லது அஞ்சல் அட்டையுடன் வருகை தந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (அ)

## விநாயகர் விரத இலச்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் இருபாலை கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் விநாயகர் விரத இலச்சார்ச்சனை இன்று வியாழக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து இருபது தினங்கள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகள் பிற்பகல் 3.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து மூலஸ்தான பூசை, வசந்த மண்டபப் பூசை, இலச்சார்ச்சனை, பிள்ளையார். கதை படிப்பு என்பன நடைபெறும்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சதுர்த்தி திருவிழாவும் மறுநாள் திங்கட் கிழமை மாலை 5 மணிக்கு கஜமுக சங்காரமும் இறுதி நாளாகிய 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அபிஷேகம், மூலஸ்தான பூசை, வசந்த மண்டபப்பூசை, இலச்சார்ச்சனை நடைபெற்று சுவாமி வீதியுலா வருதலும் நடைபெறுமென தேவஸ்தானத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9)

# நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை அரசியல் இலாப நோக்கம் கொண்டது!
## யாழ்.சட்டத்தரணிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பிரதம நீதியரசருக்கு எதிராக அரசினால் கொண்டு வரப்பட்ட குற்றப் பிரேரணை அரசியல் லாப நோக்கம் உடையது எனவும் இது நீதித்துறையின் சுயாதீனத்திற்கு இருட்டடிப்பு செய்யப்பட்டு உள்ளதனைச் சுட்டிக்காட்டுகின்றது என யாழ்.சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள குற்றப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக யாழ். சட்டத்தரணிகள் சங்கத்தால் நேற்றைய தினம் விசேட நிர்வாக சபைக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இக் கூட்டத்தில் பிரதம நீதியரசருக்கு ஆதரவாக யாழ்.சட்டத்தரணிகள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

இத் தீர்மானம் தொடர்பில் யாழ்.சட்டத் தரணிகள் சங்கம் குறிப்பிடுகையில்,

பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட குற்றப் பிரேரணை அரசியல் இலாப நோக்கங்கள் உடையது.

இது நீதித்துறையின் சுயாதீனத்திற்கு அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சதி நடவடிக் கையாகும்.

இக் காலம் நீதித்துறைக்கு இருட்டடிப்பு செய்யப்பட்ட காலமாகவே நாம் கருத வேண்டும்.

இக் குற்றப் பிரேரணை தொடர்பில் பொது மக்கள் மத்தியில் நீதித்துறையினை கீழ் நோக்கிய ஒரு பார்வைக்குக் கொண்டு சென்றுள்ளது.

வடக்கு-கிழக்கில் நீதித்துறையின் மூலம் சுயாதீனமான சுமுக நிலை மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்டுள்ள நிலையில், அதனைக் குழப்பும் நோக்குடனேயே அரசு இக்குற்றப் பிரேரணையினைக் கொண்டுவந்துள்ளது.

உயர் நீதிமன்றில் இதுதொடர்பில் வழக்கு இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்ற நிலையில் உயர் நீதிமன்றம் வழக்கு விசாரணையின் முன்னர் பாராளுமன்றத் தெரிவுக்குழுவினரின் நடவடிக்கையினை நிறுத்துமாறு பரிந்துரை வழங்கியிருந்தது.

எனினும் உயர் நீதிமன்றின் கட்டளையினை பாராளுமன்றத் தெரிவுக்குழு உதாசீனப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்றத் தெரிவுக் குழு, யாழ்.சட்டத்தரணிகள் சங்கத்திற்கு விளக்கமளிக்கப்படல் வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

மேற்படி கூட்டம் யாழ்.சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வட மாகாண உப தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான திருமதி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையில் நடைபெற்றதோடு நிர்வாக அங்கத்தவர்களும் கலந்துகொண்டிருந்தனர். (எ-4)

## நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் தரம் 1 மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று நடைபெறவிருந்த நிலையில் பிறிபோடப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்ட இப் பரீட்சை அடுத்த மாதம் 2-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப 2 மணிக்கு நடைபெறும் என பாடசாலை அதிபர் ந.தேவராஜா அறிவித்துள்ளார். (எ-8)

# க.பொ.த.(சா/த) பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

க.பொ. த (சா/த) பரீட்சை டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இதில் கடமையாற்றவுள்ள இணைப்பாளர், உதவி இணைப்பாளர், மேற்பார்வையாளர், நிரந்தர நோக்குனர் ஆகியோருக்கான அறிவுறுத்தல் கூட்டம் நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாண வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார் அறிவுறுத்துள்ளார்.

யா/வேம்படி மகளிர் கல்லூரியில் முற்பகல் 10 மணிக்கு இக்கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி புதன்கிழமை வலிகாமம் வலயம், வடமராட்சி வலயம், கோப்பாய் கோட்டம் உள்ளடக்கிய யாழ்ப்பாணம் 02 பரீட்சை பிராந்திய அலுவலர்களுக்கும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாண வலயம், தென்மராட்சி வலயம், தீவக வலயத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் 01 பரீட்சை பிராந்திய அலுவலர்களுக்கும் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து அலுவலர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9)




## மாவட்ட தொழில் அலுவலகம் இடமாற்றப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

மாவட்ட தொழில் அலுவலகமும் பிரதி தொழில் ஆணையாளர் அலுவலகமும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி சிவன்பண்ணை வீதியில் ஸ்ரீலங்கா ரெலிகொம் இற்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தில் இயங்கவுள்ளதாக பிரதி தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதன்பொருட்டு பொருட்களை இடமாற்றம் செய்தல், பூர்வாங்க வேலைகள் போன்றன காரணமாக இன்றும் நாளையும் அவசர தேவைகள் தவிர்ந்த ஏனைய அலுவலகப் பணிகள் இடம்பெறமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் இவ்வலுவலகங்கள் வீரசிங்கம் கட்டடத்தின் 4 ஆம் மாடியில் தொழில் அலுவலகமும் இல. 133, நாவலர் வீதியில் பிரதி தொழில் ஆணையாளர் அலுவலகமும் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# வீதி புனரமைப்புக்கு உறுப்பினர் நிதியுதவி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் கீழ் உள்ள யாழ்.வீதி முதலாம் ஒழுங்கை 30 வருட காலத்தின் பின் புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நகர சபையின் உறுப்பினர் பி.சுதர்சன் தனக்கு ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து இப்புனரமைப்புக்காக நிதியை ஒதுக்கியுள்ளார்.

நீண்ட காலமாக புனரமைக்கப்படாத இவ்வீதியால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். தற்போது இவ்வீதியானது புனரமைக்கப்படவுள்ளதால் பயணிகள் நன்மையடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பிரதேசசபை தவிசாளர்

# தாக்கப்பட்டமையை கண்டித்து கொழும்பு சபையில் தீர்மானம்

(கொழும்பு)

நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் தாக்கப்பட்டதைக் கண்டித்து கொழும்பு மாநகர சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜனநாயக வாக்குரிமையைப் பயன்படுத்தி தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தமது கடமையைச் செய்யும் போது தாக்கப்படுவது உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக உரிமைகளுக்கு விடுக்கப்படும் பாரிய சவால் எனக்கருதி இந்த நாட்டின் பிரதான உள்ளூராட்சி சபையான கொழும்பு மாநகர சபை இதைக் கடுமையாக கண்டிக்க வேண்டுமென ஜனநாயக மக்கள் முன்னணி பாஸ்கராவால் கொண்டு [illegible]ப்பட்ட பிரேரணையே நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபையில் இப்பிரேரணையை முன் வைத்து உரையாற்றிய பாஸ்கரன் மேலும் தெரிவிக்கையில்,

சமய தலங்கள் தாக்கப்படும் பொழுது ஒரு ஜனநாயகப் பண்புடைய யாவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இதற்கிணங்க என்னால் கொண்டு வரப்பட்ட இப்பிரேரணையும் ஒரு சமூகத்தை பிரதிநிதிப்படுத்துபவருக்கான பாதுகாப்பு சம்பந்தமானது.

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச சபை தலைவர் சபை அலுவலகங்களில் ஈடுபட்டிருந்த போது தாக்கப்பட்டது கண்டிக்கப்பட வேண்டும். இதனை செய்தவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாக கைது செய்யப்பட வேண்டியவர்கள், தண்டிக்கப்பட வேண்டியவர்கள், மூவின மக்களும் ஒற்றுமையாக இருப்பதற்கும் கௌரவமாக இருப்பதற்கும் அரசுக்கு அவப்பெயரை தேடிக் கொடுக்க முற்பட்ட இனவாத, மதவாத பிரிவினர் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பிரதேச சபை உறுப்பினர்கள் மக்களுடன் மக்களாக மக்களுக்கு சேவை செய்பவர்கள். இவர்களின் பாதுகாப்பு மிக முக்கியமானது. மக்களின் குறைகள், மக்களின் துன்பங்கள் இவர்களுக்குத் தான் கூடத் தெரியும். இன்று யுத்தம் முடிந்து மூன்று வருடங்கள் சென்ற வேளையில் இலங்கையில் கலாசாரச் சீரழிவுகள் தலை தூக்கியுள்ளதை பார்க்கக் கூடிய தாகவுள்ளது. இப்படியான செயற்பாடுகள் குறித்து பிரதேச சபை உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கும் பொழுது அவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படுகின்றது.

இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இதற்கிணங்க இலங்கையில் குறிப்பாக வடக்குக் கிழக்கில் போதைவஸ்துக் கலாசாரம் தலை தூக்கி உள்ளதை பார்க்கக் கூடியதாகவுள்ளது. இவற்றுக்கு எதிராக கருத்துத் தெரிவிக்கும் பிரதேச சபை உறுப்பினர்கள் அக்குழுவினரால் தாக்கப்படலாம். அப்படியான ஒரு நிகழ்வு நடைபெறாமல் போதைவஸ்து, சமூகச் சீரழிவை ஊக்குவிப்போர் கைது செய்யப்பட வேண்டும். இல்லையேல் இலங்கை அரசாங்கத்திற்கு அவப் பெயர் ஏற்படும்.

அதைத்தொடர்ந்து சிங்கள உறுமய கட்சி உறுப்பினர் தனது இனவாதக் கருத்துக்களை தாராளமாக தெரிவித்த வேளை ஜனநாயக மக்கள் முன்னணி உறுப்பினர்கள் குருசாமி, குகவரதன், பிரியாணி, வேலணை வேணியன் ஆணித்தரமாகவும் ஆதரவாகவும் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., சுதந்திரக்கட்சியின் ஓர் உறுப்பினர் எதிர்ப்பாகவும் சார்பாக பல உறுப்பினர்களும் கருத்து தெரிவித்து பிரே ரணை நிறைவேற்றப்பட்டது. (அ-2)

# பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

இலங்கையின் பட்டதாரி பயிலுநர் நியமனம் வழங்கப்பட்ட 2 ஆயிரத்து 500 பேருக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கல்வி அமைச்சு கூறியுள்ளது.

மாகாண மட்டங்களில் வெற்றிடம் நிலவும் பாடசாலைகளில் இவர்களுக்கான நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் இதன்மூலம் தேசிய பாடசாலைகளில் நிர்வாக செயற்பாடுகள் இலகுபடுத்தப்படும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் கோட்டாத ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் மாகாண சபைகளின் ஊடாக பரீட்சைகள் நடத்தப்பட்டு நிரந்தர ஆசிரிய நியமனம் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

YARL Taxi

யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் முச்சக்கர வண்டி, கார், வான் சேவைகளுக்கு அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

(முச்சக்கரவண்டிகளுக்கு மட்டும் முதல் Km-70/= அடுத்து ஒவ்வொரு Km-40/=)

இங்கு முச்சக்கரம் மற்றும் கார்களுக்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத்திக் கொடுக்கப்படும்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்.
E-Mail - Yarltaxi@gmail.com

## கிராம அலுவலர் பதவிக்கான துரித மீட்டல் வகுப்புக்கள்


(யாழ்ப்பாணம்)

கிராம அலுவலர் தரம் III இற்கு சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள் கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வகுப்புக்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு முன்னாள் அரச அதிபர் தி.இராசநாயகத்தினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இதற்கு விண்ணப்பித்தவர்கள், புதிதாகச் சேர விரும்புபவர்கள் அனைவரும் குறித்த திகதியில் கிளிநொச்சி மாவட்டத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திற்கு சமுகமளிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்ப கல்வி நிறுவன அதிபர் க.வைரமுத்து கேட்டுள்ளார். (அ-9)

# 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்





தோற்றம்:
22.05.1940

நாம் வாழும் வாழ்க்கைக்கு
அர்த்தம் தந்த நம் இதய தெய்வமே
இன்னும் பல ஆண்டுகள்
உங்களோடு உறவாடி வாழ்வோம்
என்று நாம் எண்ணி இருக்க
ஏனோ ...? கண்ணிமைக்கும் வேளையில்
காலனவன் உங்களை கவர்ந்து சென்றுவிட்டான்
ஐயகோ! ஆறமுடியவில்லை எம்மால்
ஆயினும் சீமானே
நீர் காட்டிய பாதையில் இறுதிவரை
எம் பாதங்கள் தொடரும்
கணமும் உங்களின் நினைவில் வாழும்
உங்கள் உறவுகள்

மறைவு:
30.10.2012

கடந்த (30.10.2012) அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறி சகல வகையிலும் எமக்கு உதவிகள் செய்து எமது துயரில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

அமரர் நடராசா நவரட்ணராஜா
(இ.போ.ச.முன்னாள் ஊழியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை புறக்கணித்துவிட்டு சீன உதவியுடன் செயற்கைக்கோள்

## இலங்கையை சாடுகிறார் ஆராய்ச்சி நிபுணர் பிரமா

இலங்கை சுப்ரீம் சாட்-1 என்ற முதல் தொலைத்தொடர்பு செயற்கைக் கோளை நேற்று முன்தினம் விண்ணில் வெற்றிகரமாக ஏவியது.

ஆனால், அயல்நாடான இந்தியாவை புறக்கணித்துவிட்டு சீனாவில் இருந்து இலங்கை தனது செயற்கைகோளை செலுத்தியுள்ளது. இதன்மூலம் இந்தியாவை விட சீனாவுடன் உறவு மெல்லமெல்ல வலு த்து வருவது தெரிகிறது என மத்திய கொள்கை ஆராய்ச்சி நிபுணர் பிரமா செலானி தெரிவித்துள்ளார்.

இலங்கை சுப்ரீம் சாட்-1 என்ற முதல் தொலைத்தொடர்பு செயற்கைக் கோளை ஆயிரத்து 776 கோடி ரூபா செலவில் சீனாத் தொழில் நுட்ப உதவியுடன் தயாரித்தது.

இந்த நிலையில் அந்த செயற்கைக் கோள் சீனாவின் ஜி.சங்க் விண்வெளி மையத்தில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது. அது வெற்றிகரமாக செலுத்தப்பட்டதாக இலங்கை அரசு அறிவித்தது.

இதை இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் இளையமகன் ரோகித உரு வாக்கினார். அவரது திட்டம் வெற்றிபெற்றதாக அந்நாட்டு மக்கள் புகழாரம் சூட்டியுள்ளனர்.

செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தும் தொழில்நுட்பம் இந்தியாவில் உள்ளது. இங்கிருந்து பல நாடுகள் தங்கள் செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தி வருகின்றன.

தெற்காசிய நாடுகளில் சீனாவின் உதவியுடன் செயற்கைக்கோளை ஏவிய 2 ஆவது நாடு இலங்கை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்பு பாகிஸ்தானின் செயற்கைக் கோளையும் சீனா விண்ணில் ஏவியது. (அ-2)

## வவுணதீவு பிரதேசத்தில் சிறைச்சாலை அமைப்பு

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தில் சிறைச்சாலையொன்றை ஸ்தாபிப்பது தொடர்பில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. பாரதூரமான செயல்களுடன் தொடர்புடைய கைதிகளைத் தடுத்து வைப்பதற்காகவே மேற்படி சிறைச்சாலை அமையப்பெறவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக ஆராய்வதற்கு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துடன் வவுணதீவு பிரதேசத்திற்குச் சென்றுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜி.எஸ் வித்தாணகே தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பொறியியலாளர்கள் வவுணதீவு பிரதேசத்தில் முன்னோடி ஆய்வுகள் மேற்கொண்டதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (அ-2)

## வலி.கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

### கேள்வி அறிவித்தல் - 2013

**கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 2013 ஆம் ஆண்டிற்கு (01.01.2013 – 31.12.2013) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.**

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 29.11.2012 - 13.12.2012.
கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 14.12.2012 பி.ப 12.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 14.12.2012 பி.ப 02.00 மணி.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை **"தவிசாளர், வலி.கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** எனும் முகவரிக்கும், இணைப் பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணைவீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் , எதிர்வரும் *14.12.2012* ஆம் திகதி பி.ப *12.00* மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ,அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப் படாதகேள்விப் படிவக் கட்டணம் (வரி நீங்கலாக) | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் (வரி நீங்கலாக) | ஏற்றுக் கொள்ளக் கூடியஆகக்குறைந்த தொகை(வரி நீங்கலாக) | மாதாந்த வாடகை (வரிநீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| 01 | அச்சுவேலிபொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டித்தரிப்பிடம்உட்பட) துவிச்சக்கரவண்டி 5/= மோட்டார்சைக்கிள் 10/= | 2000.00 | 10,000.00 | 5,016,000.00 | |
| 02 | அச்சுவேலிமாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 517,000.00 | 500.00 |
| 03 | அச்சுவேலிகோழியிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 165,000.00 | 500.00 |
| 04 | அச்சுவேலிஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 46,500.00 | 500.00 |
| 05 | வளலாய் தம்பாலைபொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 91,500.00 | |
| | புத்தூர் உப அலுவலகம் | | | | |
| 01 | புத்தூர் சந்தைமாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 176,000.00 | 500.00 |
| 02 | புத்தூர் பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 129,500.00 | |
| 03 | புத்தூர் சந்தைஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |
| 04 | ஆவரங்கால் பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 25.500.00 | |
| | நீர்வேலி உப அலுவலகம் | | | | |
| 01 | நீர்வேலிமாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 56,500.00 | 500.00 |
| 02 | நீர்வேலிஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |
| 03 | நீர்வேலிமீன்சந்தை | 300.00 | 1000.00 | 10,000.00 | |
| 04 | நீர்வேலிபொதுச்சந்தை | 300.00 | 1000.00 | 10,000.00 | |
| | கோப்பாய் உப அலுவலகம் | | | | |
| 01 | கோப்பாய் வடக்குமாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 247,500.00 | 500.00 |
| 02 | கோப்பாய் வடக்குஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |
| | உரும்பிராய் உப அலுவலகம் | | | | |
| 01 | உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 118,500.00 | 500.00 |
| 02 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 75,500.00 | 500.00 |
| 03 | உரும்பிராய் மத்தியசந்தை | 500.00 | 2000.00 | 35,000.00 | |
| 04 | ஊரெழுமாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 71,500.00 | 500.00 |
| 05 | ஊரெழுஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 1000.00 | 22,000.00 | 500.00 |
| 06 | ஊரெழுகோழியிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |

01. சந்தையிலிருந்து 01 கி.மீற்றர் சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது.
02. கேள்விப் பத்திரங்களைப் பெறவிரும்புபவர்கள் தத்தமது பிரதேச கிராமசேவையாளர்களின் வதிவிடச் சான்றிதழ், கிராமசேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாளஅட்டைப் பிரதியுடன் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12%பெறுமதி சேர் வரியும் 2%தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும், காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்படவேண்டும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
05. இறைச்சிக் கடைக்குவிண்ணப்பப் படிவங்கள் பெறுபவர்கள் தங்களதுமுன் அனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும், முன்பு கடைநடாத்திய பிரதேசசபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.
06. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்தகேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
07. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம் .
08. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

*வலி.கிழக்கு பிரதேசசபை,*
*தலைமை அலுவலகம், புத்தூர்.*

(சி-1632)

**திரு.அன்னலிங்கம் உதயகுமார்**
*தவிசாளர்*

## சுய பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கு

(பூந்தோட்டம்)

யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் வவுனியா தெற்கு வலய அலுவலக ஆலோசனை வழிகாட்டல் பிரிவினால் சிதம்பரபுரம் சிறிநாகராஜா வித்தியாலய மாணவர்களுக்கான சுய பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.வரதராஜா தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் தரம் 8,9,10 ஆகிய வகுப்புக்களை சேர்ந்த மாணவர்களுக்கான சுயபாதுகாப்பு தொடர்பான கருத்துக்களை வவுனியா தெற்கு வலய ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆறு சுபாஸ்கரன், தொழில் வழிகாட்டல் அதிகாரி திருமதி ந.க. கிரேனியர், வடமாகாண உளசமூக வள நிலைய உதவி முகாமையாளர் ச.ஆனந்த நடராஜன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

சிறுவர் துஷ்பிரயோகங்களில் இருந்து மாணவர்கள் தம்மை தாமே பாதுகாத்து கொள்வதற்கான பயிற்சிகள் இக்கருத்தரங்கின் ஊடாக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-266)

## சீனக் கப்டனை விடுவிக்க இலங்கைக்கு சீனா அழுத்தம்

(கொழும்பு)

கொழும்புத்துறைமுகத்துக்கு அப்பால், இலங்கை கடற்படையினரால் நடத்தப்பட்ட சோதனையின் போது வெடிபொருட்களுடன் கைது செய்யப்பட்ட சீன மீன்பிடிப்படகின் கப்டனை விடுதலை செய்யுமாறு சீன அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த சனிக்கிழமை ஓமான் நாட்டு கொடியுடன் இலங்கைக் கடற்பரப்பில் நுழைந்த தாய்வான் நாட்டு மீன்பிடிக் கப்பலில் எம்-16 துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்பட்ட வெற்று ரவைகள் , இரண்டு ஆர்பிஜி எறிகணைகள் இருந்ததை இலங்கை கடற்படையினர் கண்டு பிடித்தனர்.

இதையடுத்து அந்தக் கப்பலின் தலைவரான சீன கப்டன் கைது செய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டு துறைமுக பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்த நிலையில், சீனநாட்டு கப்டனை விடுதலை செய்யுமாறு கொழும்பிலுள்ள தூதரகம் மூலம் சீனா இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. (அ-2)

## ஐ.தே.க. எம்.பி.திலீப்பின் வாகனத்தில் கஞ்சா

(கொழும்பு)

தங்காலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் விபத்துக்குள்ளான ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலீப் வெதஆராச்சி பயணித்த வாகனத்திலிருந்து ஆயுதங்களும் கஞ்சா போதைப்பொருளும் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அதித்யட்சகருமான பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

இதிலிருந்து துப்பாக்கியொன்று, ரவைகள் 11, ரிவோல்வர் ஒன்றும் அதற்கான ரவைகள் 6, 36 கிராம் நிறையுடைய கஞ்சா போதைப் பொருள் போன்றனவே இவ்வாறு கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் பேச்சாளார் கூறினார்.

விபத்துச் சம்பவத்தை அடுத்து குறித்த வாகனத்தை பொலிசார் சோதனையிட்ட போதே மேற்படி ஆயுதங்களும் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். இது தொடர்பில் பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் சொத்து விபரத்தை பத்மநாதன் வெளியிட்டார்

## திவயின தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் வெளிநாட்டு சொத்து விபரங்கள் பற்றிய தகவல்களை குமரன் பத்மநாதன் வெளியிட்டுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சொத்து விபரங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவப் புலனாய்வுப்பிரிவினரின் விசாரணைகளின் போது இந்த விடயங்கள் அம்பலமாகியுள்ளன.

இதன் பிரகாரம் கனடா, சுவிற்சர்லாந்து, மலேசியா, பிரிட்டன், நோர்வே, சுவீடன், ஜேர்மனி போன்ற நாடுகளில் காணப்படும் சொத்துக்கள் பற்றிய விபரங்களை அவர் வெளியிட்டுள்ளார்.

அதிகளவான சொத்துக்கள் கனடாவில் காணப்படுவதாகவும் பல்பொருள் அங்காடிகள், வாகன விற்பனை நிலையங்கள், குத்தகை நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் புலிகள் பணத்தை முதலீடு செய்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# இலங்கை தொடர்பில் ஆராய மலேசியா சபையில் குழு அமைப்பு

இலங்கையின் மனிதவுரிமைகள் மீறல்கள் குறித்து ஆராயமலேசிய நாடாளுமன்றத்தில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக மலேசிய பிரதம மந்திரியின் திணைக்கள அமைச்சர் டெடுக் செரிநஷ்ரி அஸீஸ் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் இணைந்து இந்தக் குழுவை அமைத்துள்ளனர்.

இக்குழு இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் பரிந்துரைத்த மனித உரிமைகள் அமர்வின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுகிறதா? என்பதை கண்காணிக்கும் என்று அமைச்சர் அஸீஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக்குழு இலங்கைக்கு எதிரானது அல்ல. எனினும் அங்கு தமிழர்களுக்கு எதிரான மனிதவுரிமை மீறல்கள் தடுக்கப்பட வேண்டும்.

அத்துடன் குற்றமிழைத்தவர்கள் நீதிக்கு முன்கொண்டு வரப்பட வேண்டும் என்பதை இந்த நாடாளுமன்ற குழு வலியுறுத்தும் என்று அஸீஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த நாடாளுமன்றக்குழு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மலேசிய வருகைக்கு எதிர்ப்பை வெளியிட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

குறித்த நாடாளுமன்ற குழுவுக்கு பிரதமமந்திரியின் திணைக்கள பிரதியமைச்சர் டெடுக் எஸ்.கே. தேவமணி தலைமை வகிக்கிறார். இந்த நிலையில் இக்குழு எதிர்வரும் டிசம்பர்18 ஆம் திகதியன்று கூடி கலந்துரையாடவுள்ளது. (அ-2)

# மாந்திரீக கிரியையால் 15 வயது சிறுவன் பலி

(கொழும்பு)

மாந்திரீக கிரியைகளில் பங்கேற்ற சிறுவன் ஒருவன் பரிதாபமாக கொல்லப்பட்டுள்ளான்.

அம்பாறை மாவட்டத்தில் தெஹியந்த கண்டிய பிரதேசத்தில் நடைபெற்ற மேற்படி கிரியைகளில் பங்கேற்ற 15 வயது சிறுவனே உயிரிழுந்துள்ளான்.

மாந்திரீகர் நோயைக் குணப்படுத்துவதாகக்கூறி சிறுவனின் வாய்க்குள் கத்தியை விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஏற்பட்ட காயங்களினால் சிறுவன் உயிரிழந்துள்ளான். மேலும் மாந்திரீக கிரியைகளின் போது ஏற்பட்ட தீ விபத்தில் மேலும் இருவர் காயமடைந்து பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-2)

# புதிய சேவை ஆரம்பிக்கும் மிஹின் லங்கா நிறுவனம்

(கொழும்பு)

மிஹின் லங்கா விமான சேவை நிறுவனம் மேலும் பல புதிய சேவைகளை ஆரம்பிக்கவுள்ளது.

இதன் பிரகாரம் மிஹின் லங்கா தமது சேவையை அடுத்த மாதத்தில் மதுரைக்கு ஆரம்பிக்கவுள்ளது.

ஏற்கனவே இவ்விமான சேவை கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் நட்டங்களை எதிர்நோக்கி வருகின்றமையால் இலங்கை அரசாங்கத்துக்கு பல பில்லியன் ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் களவுக்கு அமைய மிஹின் லங்கா நிறுவனத்துக்குஅண்மையிலும் புதிய விமானம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விமானம் மதுரைக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி முதல் நாளாந்த சேவைகளை நடத்தவுள்ளது. (அ-2)

# கசிப்பு வாயு வெளியேறி இலங்கையர்கள் பலி

(கொழும்பு)

சவுதி அரேபியாவின் அல் பொபார் நகரில் வீடொன்றில் சாரதியாக பணியாற்றிய இலங்கையர்கள் இருவர் கசிப்பு தயாரித்த போது அதிலிருந்து வெளியான விஷவாயுவினால் மரணமடைந்துள்ளனர்.

ஹோமாகம கிரியத்துடுவே ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

குறித்த நபர்களின் பிரேத பரிசோதனை அறிக்கை உயர்ஸ்தானிகராலயத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளதோடு சடலங்களை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரியாத்தில் உள்ள உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. (அ-2)

# 8 இலட்சம் பெறுமதியான 5 பற்றரிகள் திருட்டு

(கொழும்பு)

மொபிட்டெல் கோபுரத்தில் பொருத்தப்பட்டிருந்த 8 இலட்சம் ரூபா பெறுமதிவாய்ந்த 5 பற்றரிகள் களவாடிய சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் மீரிகம தெலிகம பிரதேசத்தில் வசித்து வந்தவர் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து மொபிட்டெல் கோபுரத்தில் பொருத்தப்பட்டிருந்த 4 பற்றரி மற்றும் தீயணைக்கும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை இக்களவுடன் தொடர்புடைய மேலும் மூவரை மல்வத்து கிரிபிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ-2)

# பிக்குகளுக்கு சுத்தமான உணவு கிடைக்க ஊட்டச்சத்து திட்டம்

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

பௌத்த பிக்குகளுக்கு இலங்கையின் பெரும்பான்மை இன பௌத்த மக்கள் வழங்குகின்ற உணவு நன்கொடைகள் அவர்களுக்கு சுகாதாரமாக அமைய வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் ஒரு ஊட்டச்சத்து நெறி முறைஒன்றைமுன்னெடுக்கவுள்ளது.

நீரிழிவுநோய் உட்பட உணவுகள் தொடர்பான நோய்களால்பௌத்த பிக்குகள் பாதிக்கப்படுவது அதிகரிப்பதாக செய்திகள் வந்து கொண்டிருக்கும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இலங்கையில் வாழ்கின்ற பிக்குமாரின் வாழ்க்கை சிக்கனமானது. அவர்கள் தமக்காக சமைப்பது கிடையாது. அதற்குப் பதிலாக பக்தர்கள் கோயிலிலோ அல்லது வீடுகளிலோ அவர்களுக்கு சிறப்பு நாட்களில் வழங்கும் உணவுகளை அவர்கள் உண்பார்கள். சிலவேளைகளில் வழங்கும் உணவுகளை அவர்கள் உண்பார்கள்.

சில வேளைகளில் இந்த பிக்குமார் பக்தர்களின் வீட்டுக்கு உணவுக்காக செல்வதுண்டு. பௌத்த பக்தர்களால் பிக்குகளுக்கு வழங்கப்படும் உணவு பெரும்பாலும் மரக்கறிதான். ஆனால் அதுவும் எப்போதும் சுகாதாரமானதாக இருக்காது என்று சுகாதார அமைச்சு கூறுகின்றது.

இதனால் சிறிய வயது பிக்குமாருக்கு கூட நீரிழிவுநோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதயம் சம்பந்தமான நோய்கள் வந்துவிடுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

பாரம்பரிய வழமைகளின் படி பிக்குமார் தமக்கு என்ன கிடைக்கிறதோ அதனை உண்ண வேண்டும். அதனால் தமது உணவை தெரிவு செய்து கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடையாது.

இனிப்பான உணவுமற்றும் கொழுப்பு உணவு ஆகியவற்றுக்கு பிரபலமான இலங்கையில் சில நேரங்களில் பிக்குமார் வயிறு நிறைய சாப்பிட நேரிட்டு விடுகிறது.

அத்துடன் பிக்குமார் சரியாக உடற்பயிற்சிகளும்செய்யாதுபோனால் நிலைமை மேலும் மோசமாகிவிடும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

ஆகவே இந்த விடயத்தில் பிக்குமாரையும் அவர்களுக்கு உணவு வழங்கும் பக்தர்களையும் வழி நடத்துவதற்கான வழிமுறை ஒன்றை வகுக்குமாறு உணவு நிபுணர்களை அமைச்சு கேட்டுள்ளது. இதன் முழுமையான வடிவம் அடுத்த மாதம் வெளிவரும். (அ-2)

# கொழும்பு மாவட்ட செயலகத்தின் தீ விபத்து திட்டமிட்ட சூழ்ச்சியாகும்

## விசாரணைகள் தொடர்கின்றன

கொழும்பு மாவட்ட செயலக கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்துச் சம்பவம் ஓர் சூழ்ச்சி நடவடிக்கையா? என விசாரணை இடம்பெற்று வருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலகோடி ரூபா பெறுமதியான ஆவணங்களை அழிக்கும் நோக்கில் இவ்வாறு தீ வைக்கப்பட்டதா என விசாரிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

போலி காணி உறுதி, பிறப்பு அத்தாட்சி பத்திரம், வரி ஆவணங்கள் போன்றன தொடர்பில் ஏற்கனவே முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


வெளிநாட்டில் வாழ்ந்து வருவோரின் உடைமைகள் இவ்வாறு போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வேறு நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

தீ மிக வேகமாக பரவியதாகவும் இது நாச வேலையாக இருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ-2)




பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் (DCP) ஒதுக்கப்பட்ட நிதியில் வாழ்வாதார உதவிகள் கொக்குவில் மேற்கு ஜே/90, ஜே/125 கிராம அலுவலர் பிரிவு மாதர் சங்கங்களில் வழங்கப்பட்டன. இந்நிகழ்வின் போது.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# சிறுவர் அரங்கம்

295

# நெறி தவறாதவன்



இரத்தினபுரி மன்னன் இரத்தினதேவன் ஒருநாள் இரவு தன் சேனாதிபதி சிம்மநாதனுடனும் அமைச்சர் அரவிந்தாட்சருடனும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான். அன்று விஜயதசமி நாள். அப்போது திடீரென்று ஒரு குதிரை வீரன் அவர்களின் முன் தோன்றி நின்றான். சேனாதிபதி கடும் கோபத்தோடு நீயார் உனக்கு என்ன வேண்டும் என்று அதட்டிக் கேட்டான்.

அந்தக் குதிரை வீரனும் பார்த்தால் தெரியவில்லை நான் போர் வீரன் என்று. வீரன் வேண்டுவது போரைத் தானே. ஆனால் நான் இப்போது யாருடனும் சண்டைபோட வரவில்லை. என் சக்தியைக் காட்டிவிட்டு என் போன்ற ஒரு வீரனை உங்கள் வீட்டில் இருப்பதைக் காட்டுவீர்களா? என்று சவால் விட்டு விட்டுப் போகவே வந்திருக்கிறேன் என்றான்.

அதைக்கேட்ட சிம்மநாதன்

## அம்புலிமாமா கதைகள்

சரி உன் சக்திதான் என்ன? அதை முதலில் காட்டு. எனவே அந்தக்குதிரை வீரனும் இது சக்தி வாய்ந்த வாள். இதனால் உங்களில் யார் வேண்டுமானாலும் என் கழுத்தில் ஒரே வெட்டுத்தான் வெட்டவேண்டும். ஆனால் எனக்கு ஒரு ஆபத்தும் நேராது. ஆனால் அடுத்த ஆண்டு விஜய தசமி அன்று இன்று என்னை அடிக்கும் வீரன் என் கோட்டையான வீரபுரத்திற்கு வந்து தன் கழுத்தில் நான் வெட்டும் ஒரே வெட்டைத்தாங்க வேண்டும் என்றான்.

அதுகேட்டு எல்லோருக்கும் சிரிப்பே வந்தது. வாளால் கழுத்தில் ஓங்கி ஒரு வெட்டு வெட்டினால் யாராவது பிழைத்திருக்கமுடியுமா? இறக்கத் தானே வேண்டும்.

சிம்மநாதன் அந்த வீரனருகே போய் சரி உன் வாளைக் கொடு. நான் உன் கழுத்தில் ஒரே வெட்டு வெட்டுகிறேன். அதற்குப் பின்பும் நீ பிழைத்திருந்தால் அடுத்தாண்டு விஜயதசமி அன்று நான் உன் கோட்டைக்கு வந்து என் கழுத்தை நீட்டி உன் வாள் வெட்டை ஏற்கிறேன் என்றான்.

அந்த வீரனும் தனது சக்தி வாய்ந்த வாளை சிம்மநாதனிடம் கொடுத்துவிட்டு தன் கழுத்தை நீட்டிக்கொண்டு வெட்டை ஏற்கத்தயாரானான். சிம்மநாதனும் அந்த வாளால் அந்த வீரனின் கழுத்தில் ஒரு வெட்டு வெட்டினான்.

ஆனால் என்ன ஆச்சரியம்! அந்த வாள் அந்த வீரனின் கழுத்தில் பாதிவரை இறங்கியும் ஒரு சொட்டு இரத்தம்கூட வெளியே வரவில்லை. அந்த வீரன் சிரித்தவாறே அந்த வாளைத் தன் கழுத்தில் இருந்து எடுத்தான். கழுத்தில் காயம்பட்ட அடையாளமே இல்லை. அந்த வீரனும் சரி. அடுத்தாண்டு விஜய தசமி அன்று தவறாமல் என் கோட்டைக்கு வந்து சேர் என்று கூறி தன் குதிரை மீது அமர்ந்து சென்றுவிட்டான்.

ஓராண்டு கழிய மூன்று நாட்கள் இருக்க வீரபுரக் கோட்டையில் விஜயதசமி அன்று இருக்க சிம்மநாதன் முன்னதாகவே இரத்தினபுரியில் இருந்து புறப்பட்டு விட்டான்.

வழியில் ஓரிடத்தில் யாரோ ஒரு பெண் அலறுவது அவன் காதில் விழுந்தது. அவன் ஓடிப் போய் சத்தம் வந்த இடத்தைப் பார்க்கையில் இரண்டு, மூன்று திருடர்கள் ஒரு பெண்ணைக் கட்டிப்போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டான். அவள் பார்க்க ஒரு அரசகுமாரி போல் இருந்தாள். சிம்மநாதன் வாளை உருவி அத்திருடன்கள் மீது பாய்ந்து தாக்கவே அவர்கள் பயந்து ஓடிவிட்டார்கள்.

சிம்மநாதன் அப்பெண்ணின் கட்டுக்களை அவிழ்த்து விட்டான். அவளும் தான் அரசகுமாரி எனக்கூறி சிம்மநாதனைப் பற்றி விசாரித்து அவன் வீரபுரக்கோட்டைக்குச் செல்லும் காரணத்தைத் தெரிந்து கொண்டாள். அப்போது அவள் நீங்கள் என்னைத் திருடர்களிடம் இரு



ந்து காப்பாற்றினீர்கள். என் நன்றியைச் செலுத்த இந்த மந்திர மோதிரத்தைக் கொடுக்கிறேன். இது உங்களிடம் இருக்கும் போது எந்த ஆயுதத்தாலும் உங்களுக்குத் தீங்கு விளைவிக்கமுடியாது என்று கூறி மோதிரத்தைக் கொடுக்க முயன்றாள்.

சிம்மநாதனோ வேண்டாம். நான் நெறிதவறமாட்டேன். என் சக்தியைக்கொண்டே வெற்றி பெறுவேன் எனக்கூறி தன் கவ



சத்தையும் ஆடைகளையும் களைந்து கரையில் வைத்து விட்டு ஆற்றில் குளிக்கச் சென் றான்.

அப்போது அரசகுமாரி அவனுக்குத் தெரியாமல் அந்த மந்திரமோதிரத்தை அவனது கவசத்தில் ஒளித்து வைத்து விட்டுச் சென்றாள். சிம்மநாதனும் குளித்துவிட்டுக் கரைக்கு வந்து ஆடைகளையும் கவசத்தையும் அணிந்து கொண்டு சென்று விஜயதசமி அன்று வீரபுரத்தை அடைந்தான். அவன் கோட்டைக்குள் போய் குதிரை வீரனைக் கண்டு தான் அன்று சொன்ன சொல்லைக் காக்க வந்திருப்பதாகக் கூறினான்.

அந்தவீரனும் தன் வாளை எடுத்துக்கொண்டு நானும் சொன்னபடி உன் கழுத்தில் ஒரு வெட்டுத்தான் வெட்டுவேன். அதற்குப் பின்பு நீ எங்கே உயிருடன் இருக்கப் போகிறாய் என்றான்.

சிம்மநாதனும் கழுத்தை நீட்டினான். அந்த வீரனும் தன் வாளால் ஒரு வெட்டு வெட்டினான். வாள் கழுத்தில் பாதி வரை இறங்கியும் ஒரு சொட்டு இரத்தம்கூட வெளியே வரவில்லை. சிம்மநாதன் தன் கழுத்தில் பதிந்திருந்த வாளை எடுத்தான். அந்த இடத்தில் வெட்டுப்பட்ட தடயமே இருக்கவில்லை. இருவரும் ஆச்சரியப்பட்டு நின்றனர்.

அப்போது அரசகுமாரி தன் தந்தையுடன் அங்கு வந்தாள். அவள் தன் தந்தைக்குச் சிம்மநாதனைக்காட்டி இவர் என்னை முரடர்களிடமிருந்து காப்பாற்றினார். நான் அதற்கு நன்றி செலுத்த என் மந்திர மோதிரத்தைக் கொடுத்து இதன் சக்தியைக்கூறினேன். இவர் தாம் நெறிதவறாதவர் எனக் கூறி அதை ஏற்க மறுத்தார். நானோ இவருக்குத் தெரியாமல் அந்த மோதிரத்தை இவரது கவசத்தில் மறைத்து வைத்தேன். அதுதான் இவரைக் காப்பாற்றியது என்றாள்.

வீரனும் நீங்கள் இருவரும் கடமையைச் செய்தீர்கள் என மகிழ்ச்சியுடன் கூற அரசனும் நானும் என் கடமையைச் செய்கிறேன் என்று கூறி தன் மகளை சிம்மநாதனுக்கு மணம் செய்துவைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

116



பொன்.சிவகுமாரன்

### 1972 புதிய அரசியல் யாப்பு

1972 ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு ஒன்றினை சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசு பாராளுமன்றத்தில் குடியரசு யாப்பை நிறைவேற்றியது. பிரித்தானிய அரசியின் பிரதிநிதியாக இருந்த தேசாதிபதி அந்த யாப்பின்படி இலங்கைப் பிரதம ரின் பரிந்துரைக்கு இணங்க நடக்கும் ஜனாதிபதி ஆகினார். அரசியால் முதலில் நியமனமான தேசாதிபதி ஒலிவர் குணத்திலகாவுக்குப் பதிலாக முதலாவது ஜனாதிபதியாக வில்லியம் கோபல்லாவை நியமனமானார்.

அரசியலமைப்பை ஆக்க அவையைப் புறக்கணித்தவர்கள், அதிலிருந்து வெளியேறியவர்கள், அதன் மூலம் அந்த அரசியல் யாப்பைத் தயாரிப்பதில் பங்கு கொள்ள மறுத்தவர்கள், தயாரித்து ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய அரசியலமைப்பை ஏற்கிறோம் என்று கையொப்பமிட்டார்கள். எனவே, தமிழ்மக்கள் புதிய அரசியல் யாப்பை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொண்டார்கள் என வாதிடலாம். ஆனால், அவர்கள் யாழ்ப்பாணத்தில் பொதுமக்களுடன் கூடி அந்த அரசியல் யாப்பைத் தீயிட்டுக் கொளுத்தித் தம் எதிர்ப்பைக் காட்டினார்கள். யாப்பில் திருத்தங்கள் செய்யுமாறு கூட்டணி கோரியதை அரசு மறுத்துவிட்டது. புதிய அரசியல் யாப்பைத் தமிழரசுக்கட்சி முற்றாக நிராகரித்தது. அதன் எடுத்துக்காட்டாக செல்வநாயகம் தனது பாராளுமன்றைப் பதவியைத் துறந்தார். பின்னர் இடைத் தேர்தலில் பெருவெற்றிபெற்றார்.

### 1972 கூட்டணியின் தோற்றம்

தமிழ் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மாணவச் சங்கங்கள் என்பன 1972 இல் ஒன்று சேர்ந்து வட்டுக்கோட்டையில் ஒரு மகாநாடு கூட்டி, அதில் தம்மிடையே ஒரு கூட்டணியை உருவாக்கின. சாத்வீகமான கோரிக்கைகள் பயனற்றுப்போனதும் தமிழ்த்தலைவர்கள் வட்டுக்கோட்டையில் கூடி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர். "சுதந்திரத்துக்கான புனிதப்போரில் தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணிக்க முன்வருமாறும் இறைமையுள்ள சோஷலிசத் தமிழீழ அரசு என்ற இலக்கை அடையும்வரை தயங்காது உழைக்குமாறும் தமிழ்த்தேசிய இனத்திற்குப் பொதுவாகவும் தமிழ் இளைஞர்களுக்குச் சிறப்பாகவும் இம்மகாநாடு அறைகூவல் விடுக்கின்றது" என்பது தீர்மானமாகும். சமூக முரண்பாட்டின் புதிய பாதை திறக்கப்பட்டது.

> "சுதந்திரத்துக்கான புனிதப் போரில் தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணிக்க முன்வருமாறும், இறைமையுள்ள சோஷலிசத் தமிழீழ அரசு என்ற இலக்கை அடையும் வரை தயங்காது உழைக்குமாறும், தமிழ்த்தேசிய இனத்திற்குப் பொதுவாகவும் தமிழ் இளைஞர்களுக்குச் சிறப்பாகவும் இம்மகாநாடு அறைகூவல் விடுக்கின்றது"

அதேவேளை 1972 இன் பிற்பகுதியில் தமிழ் மாணவர்கள் பேரவை தலைமறைவு இயக்கமாக மாறியது. 1974 இல் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த தமிழ் ஆராச்சி மகாநாடு குழப்பப்பட்டமை இளைஞர்களின் உணர்வுகளைத் தூண்டிவிட்டது. ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் வீரசிங்கம் மண்டபத்தின் முன் கூடியிருந்தபோது, அந்நாள்

# சுதந்திர இலங்கை

பொலிஸ் அதிபர் சந்திரசேகரா தலைமையில் மக்கள்மீது கலைப்பு நோக்கோடு வானத்தை நோக்கித் துப்பாக்கிச் சூடு வைக்கப்பட்டது. அதனால் மின்சாரக்கம்பி அறுந்து 9பேர் மரணமானார்கள். சந்திரசேகராவின் ஜீப்பிற்குக் குண்டுவீசியமைக்காக சிவகுமாரன் தேடப்பட்டார். பின்னர் கைதாகும் நேரத்தில் சயனட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். அதன்பின்னர் தமிழீழ விடுதலை இயக்கங்கள் தலைதூக்கின.



வில்லியம்கோபல்லாவ வரவேற்கப்பட்டபோது

1976 இல் தமிழர் கூட்டணி தனது வட்டுக்கோட்டை மகாநாட்டில் தமிழர் விடுதலைக்கூட்டணி எனத் தம் பெயரை மாற்றிக்கொண்டதோடு, இப்புதிய கூட்டணிக்கு முப்பெரும் தலைவர்களாக செல்வநாயகம், பொன்னம்பலம், தொண்டமான் ஆகியோர் அமைந்தனர்.

### 1977 பொதுத்தேர்தல்

1977 ஆம் ஆண்டு நிகழ்ந்த பொதுத்தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் தேர்தலில் ஆசனங்களைக் கைப்பற்றிப் பெரும் வெற்றிபெற்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 8 ஆசனங்களுடன் படுதோல்வி கண்டது. அதனால் எதிர்க்கட்சியாக தமிழர் கூட்டணிக்கட்சி அமர்ந்து கொண்டது. எதிர்க்கட்சித் தலைவராக அமிர்தலிங்கம் தெரிவானார். ஸ்ரீமாவோ அம்மையாரின் வாக்குரிமை பறிக்கப்பட்டபோது அதனை எதிர்த்து அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் வாதாடினார். அதே ஆண்டு பெரியதொரு இனக்கலவரம் இலங்கையில் ஏற்பட்டது. சென்பற்றிக்ஸ் கல்லூரிக் காணிவலில் பொலிசாருக்கும் தமிழ் மாணவர்கள் சிலருக்கும் இடையிலேற்பட்ட சண்டையானது இலங்கை முழுவதும் இனக்கலவரமாக விசுவரூபமெடுத்து, 50 ஆயிரத் துக்கு மேற்பட்ட தமிழ்மக்கள் தம் வீடுகளை இழந்தனர். நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். தமிழ் ஈழ இயக்கங்கள் சட்டத்தால் தடைசெய்யப்பட்டன.



முதலாவது ஜனாதிபதி வில்லியம் கோபல்லாவ-1972

### புதியதொரு அரசியல் யாப்பு

1978 ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் யாப்பு அறிமுகமாகியது. அதில் இலங்கை, ஜனாதிபதியின் ஆட்சிக்குட்பட்டது. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி, விகிதாசாரப் பிரதிநிதித்துவம, அமைச்சரவை, பாராளுமன்றம் என்பன இந்த யாப்பில் அமைந்தன. முதலாவது ஜனாதிபதியாக ஜே.ஆர். ஜெயவர்த்தனா பதவி ஏற்றார். இதனை அடுத்து, பயங்கரவாதச்சட்டம் அமுலுக்கு வந்தது. அதன்படி அவசரகாலச்சட்டம், பத்திரிகைத் தணிக்கை என்பன அறிமுகமாயின. அத்துடன் முக்கியமாக சிறைப்படுத்துபவரைக் காலவரையறையின்றிச் சிறையில் வைத்து விசாரிக்கவும், பயங்கரவாதத்தினால் கொல்லப்படும் சடலங்களை நீதிமன்ற விசாரணையின்றி அடக்கம் செய்யவும் இடமளிக்கப்பட்டது. ஜே.ஆர். ஜெயவர்த்தனாவை அடுத்து ஆர்.பிரேமதாஸ, டீ.பி. விஜயதுங்க, சந்திரிகா . பண்டாரநாயக்க எனப்பலர் ஜனாதிபதிகளாகப் பதவி வகித்தனர். இன்று மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக உள்ளார்.

(தொடரும்)



பிரித்தானிய அரசி எலிசபெத்

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை

## 2012 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள் — மேல்மாகாணம்

# விஞ்ஞானம்

## பகுதி I

**கவனிக்க.**

**(i) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**(ii) 1 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

1. தாவர, விலங்குக் கலங்கள் இரண்டிலும் காணப்படும் பொதுவான பகுதிகள்
(i) கரு, குழியவுரு, முதலுரு, மென்சவ்வு
(ii) கரு, குழியவுரு, மையப்புன் வெற்றிடம்
(iii) மையப்புன் வெற்றிடம், கரு, பச்சை மணி
(iv) கலச்சுவர், முதலுரு மென்சவ்வு, மையப்புன் வெற்றிடம்

2. செலுலோசினால் ஆக்கப்படாத கலச்சுவர் கொண்ட அங்கிக் கூட்டம்
(i) அல்கா (ii) பங்கசு
(iii) பிரியோபைற்றா (iv) வித்து முடியிலித் தாவரம்

3. செங்குழியம் அழிவடைவது
(i) என்பு மச்சையில் (ii) சிறுநீரகத்தில்
(iii) சிறுகுடலில் (iv) ஈரலில்

4. மேற்புற மேற்றோலில் இலைவாய்கள் கொண்ட தாவரம்
(i) நாகதாளி (ii) தாமரை (iii) ஐதரில்லா (iv) வெண்டி

5. ஒரு இழையமொன்றில் காணப்பட்ட கலங்களில் பின்வரும் இயல்புகள் காணப்பட்ட.
(a) உயிரற்ற கலம்
(b) கலத்தின் சுவர் முழுமையாக தடிப்படைந்து காணப்பட்டது.
(c) குழியவுரு கலத்தின் சிறிய பகுதிக்கு மாத்திரம் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது
மேலே குறிப்பிடப்பட்ட இயல்புகளைக் கொண்ட இழையம்
(i) வல்லுருக்கலவிழையம் (ii) ஒட்டுக்கலவிழையம்
(iii) புடைக்கலவிழையம் (iv) கடற்பஞ்சுப் புடைக்கலவிழையம்

6. சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(i) உணவு சங்கிலியில் முதலாவது போசணை மட்டத்தில் எப்பொழுதும் ஒளித்தொகுப்பை மேற்கொள்ளும் அங்கிகளே காணப்படும்.
(ii) யாதேனும் சூழல் தொகுதியில் உள்ள விலங்கொன்று எப்பொழுதும் ஒருபோசணை மட்டத்திற்கே மட்டுப்படுத்தப்பட்டுக் காணப்படும்
(iii) ஒருபோசணை மட்டத்திலிருந்து அடுத்த போசணை மட்டத்திற்கு சக்தி கடத்தப்படும்போது 10% சக்தியே வீணாகிறது.
(iv) உணவுச் சங்கிலியில் இறுதி இணைப்பில் உள்ள அங்கிகளில் சக்தி ஒன்று சேர்கின்றன.

7. மனிதனின்
(A) விந்து உற்பத்திச் செயன்முறையானது வெப்பநிலைக்கு உணர்திறன் மிக்கதாகும்.
(B) அப்பாற் செலுத்தியினுள் சுக்கிலப்பாயம் சுரக்கப்படும்
(C) சுக்கிலப்புடகத்தினுள் விந்துக்கள் களஞ்சியப்படுத்தப்படும்.
மேலே தரப்பட்ட விடைகளில் சரியானது / சரியானவை
(i) A மட்டும் (ii) B மட்டும் (iii) A, C மட்டும் (iv) B, C மட்டும்

8. இலிங்கம் இணைந்த பின்னடைவான பரம்பரையலகின் காரணமாக தோன்றும் நோய் நிலைமைகள் இரண்டு
(i) தலசீமியா, அரிவார் போலி செங்கலதிலை
(ii) தலசீமியா, ஈமோபீலியா
(iii) சிவப்பு பச்சை நிறக்குருடு, ஈமோபீலியா
(iv) அரிவாட் போலி செங்கலநிலை, சிவப்பு பச்சை நிறக்குருடு

9. பின்வரும் செயன்முறைகளில் உயிர்க்கோலத்தின் காபன் வட்டத்தின் மீது செல்வாக்குச் செலுத்தாதது எது?
(i) சுவாசம் (ii) எரிமலை வெடிப்பு (iii) தகனம் (iv) மின்னல்

10. நாடி, நாளங்கள் ஆகிய இரண்டினாலும் குருதி விநியோகிக்கப்படும் உடல் உறுப்பு
(i) சுவாசப்பை (ii) ஈரல் (iii) சிறுநீரகம் (iv) இரைப்பை

11. பின்வரும் செயன்முறைகளைப் புரியும் சுரப்பிகள் முறையே
(a) உடலில் உள்ள நீர்ச் சமநிலையை கட்டுப்படுத்துவது
(b) அனுசேபச் செயன்முறையை சீராக்குவது
(c) துணைப்பால் இயல்புகளைக் கட்டுப்படுத்துவது
(i) கபச்சுரப்பி, தைரொயிட்டுச் சுரப்பி, சூலகம்
(ii) தைரொயிட்டுச் சுரப்பி, கபச்சுரப்பி, அதிரினல் சுரப்பி
(iii) இலஞ்சகன் சிறுதீவு, தைரொயிட்டுச் சுரப்பி, சிறுநீரகம்
(iv) அதிரினல் சுரப்பி, கபச்சுரப்பி, சூலகம்

12. நிறமூட்டப்படாத குருதி மாதிரியை வழுக்கியில் ஏற்றி நுணுக்குக்காட்டியினூடாக அவதானித்தபோது தெளிவாக அவதானிக்கக் கூடிய கலங்கள்
(i) குருதிச்சிறுதட்டு (ii) நியுற்றோபில்
(iii) செங்குழியம் (iv) நிணநீர்குழியம்

13. பின்வருவனவற்றுள் பல்பகுதியமாகக் காணப்படாத பதார்த்தம்
(i) மாப்பொருள் (ii) இறப்பர்
(iii) வைரம் (iv) ரெஜிபோம்

14. அயடீன் முனைவற்ற பதார்த்தமாகும். அதனை நீரினுள் இட்டு அதிக நேரம் கலக்கும்போது இளம்கபிலக் கரைசல் கிடைத்தது. இக்கரைசலுக்கு மெலிதாக்கி சிறிதளவை இட்டுக் கலக்கும்போது நீரில் காணப்பட்ட அயடீன் மெலிதாக்கியினுள் சென்றதால் நீரின் நிறம் அற்றுப் போனது. அதேநேரம் மெலிதாக்கி கடும் கபில நிறமாக மாறியது. இது தொடர்பான திருத்தமான கூற்று
(i) நீர் முனைவுக் கரைப்பானாகும் மெலிதாக்கி முனைவுக் கரைப்பானாகும்
(ii) நீர் முனைவுக் கரைப்பானாகும் மெலிதாக்கி முனைவற்ற கரைப்பானாகும்
(iii) நீர் முனைவற்ற கரைப்பானாகும் மெலிதாக்கி முனைவற்ற கரைப்பானாகும்
(iv) நீர் முனைவற்ற கரைப்பானாகும் மெலிதாக்கி முனைவுக் கரைப்பானாகும்

15. மூலகமொன்று தொடர்பாக சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - மேற்பரப்பை தேய்த்து தூய்மையாக்கியபோது சாம்பல்நிற பளபளப்பான மேற்பரப்பு கிடைத்தது
B - வளியில் நன்றாக வெப்பமேற்றிய போதும் தகனமடையவில்லை
C - ஐதான ஐதரோகுளோரிக் அமிலத்துடன் வேகமாக தாக்கமடைந்தது.
மேலே தரப்பட்ட தகவல்களுக்குப் பொருந்தக்கூடிய உலோகம்
(i) Zn (ii) Mg (iii) Pb (iv) Cu

16. சமதானி மூலகம் தொடர்பான டொல்டனின் அணுக் கொள்கையின் எக்கூற்று ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது
(i) பதார்த்தங்கள் அணு என்னும் சிறிய துணிக்கையினால் ஆக்கப்பட்டுள்ளது
(ii) அணுவை ஆக்கவோ அழிக்கவோ முடியாது
(iii) ஒரே மூலகத்தின் அணுக்கள் எல்லா விகிதத்திலும் ஒத்தவையாகக் காணப்பட்டாலும் வேறு மூலகங்களின் அணுக்கள் ஒன்றோடொன்று வேறுபட்டுக் காணப்படும்.
(iv) அணுக்கள் எளிய முழுவெண் விகிதத்தில் சேர்கின்றன.

17. 23g சோடியத்தின் அணு எண்ணிக்கைக்குச் சமனாக அமையாதது
(Na = 23, O = 16, H = 1, C = 12, Cl = 35.5)
(i) 18g நீரில் உள்ள நீர் மூலக்கூறுகளின் எண்ணிக்கை
(ii) 44g காபனீரொட்சைட்டில் உள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கை
(iii) 16g ஒட்சிசனின் உள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கை
(iv) 36.5g ஐதரோகுளோரிக் அமில மூலக்கூறுகளின் எண்ணிக்கை

18. பின்வரும் பதார்த்தங்கள் மூலகங்கள், கலவைகள், சேர்வைகள் என்ற ஒழுங்கில் அமைந்திருப்பது
(i) வளி, உருக்கு, கறியுப்பு (ii) செம்பு, பித்தளை, நீர்
(iii) செம்பு, பித்தளை, உருக்கு (iv) உருக்கு, செம்பு, கறியுப்பு

19. பின்வரும் இரசாயன தாக்கங்களின் அடிப்படையில் விடையளிக்கலாம்.

(i) $C_{(s)} + O_{2(g)} \rightarrow CO_{2(g)}$

(ii) $Zn_{(s)} + 2HCl \rightarrow ZnCl_{(aq)} + H_{2(g)}$

(iii) $CaCO_{3(s)} \rightarrow CaO_{(s)} + CO_{2(g)}$


மேலே தரப்பட்டுள்ள இரசாயன தாக்கங்களின் தாக்க வகைகளை சரியாக குறிப்பிடும் ஒழுங்கு
(i) பிரிகை, சேர்க்கை, ஒற்றை இடப்பெயர்ச்சி
(ii) சேர்க்கை, ஒற்றை இடப்பெயர்ச்சி, பிரிகை
(iii) பிரிகை, ஒற்றை இடப்பெயர்ச்சி, சேர்க்கை
(iv) சேர்க்கை, பிரிகை, இரட்டை இடப்பெயர்ச்சி

20. X என்னும் உலோகத்தின் நான்கு துண்டுகள் பின்வரும் கரைசலுக்குள் தனித்தனியாக போடப்பட்டன.
a. $CaCl_2$ (aq) b. $CuCl_2$ (aq) c. NaCl (aq) d. $ZnCl_2$ (aq)
உலோகத்தை இட்டு சிறிது நேரத்தில் இரண்டு கரைசல்களில் வீழ்படிகள் தோன்றுவதை காணலாம். இங்கு X எனக் குறிப்பிடப்பட்ட உலோகம்
(i) இரும்பு (ii) மக்னீசியம் (iii) பெற்றாசியம் (iv) வெள்ளி

21. எளிய மின்கலமொன்றை அமைப்பதற்கு முயற்சி செய்த மாணவனினால் நாகம், செம்பு மின்வாய்கள் ஒன்றோடொன்று தவறுதலாக தொடுகையிடப்பட்டது. அதன்போது மாணவன் அவதானமும் அதற்கான காரணத்தையும் சரியாக விளக்குவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| அவதானம் | காரணம் |
| --- | --- |
| 1. நாகத்தகட்டில் இருந்து வாயுக் குமிழிகள் வெளியேறின | ஐதான சல்பூரிக்கமிலம் மின்பகுக்கப்படுவதன் மூலம் மின்வாயிலிருந்து ஐதரசன் வாயு வெளியேறியது. |
| 2. செம்புத்தகட்டில் வாயுக் குமிழிகள் வெளியேறின | நாகத்தகட்டிலிருந்து செம்புதகட்டிற்கு பாயும் இலத்திரனைப் பெறும் ஐதரசன் அயன்கள் ஐதரசன் வாயுவாக வெளியேறும். |
| 3. தாழியின் அடியில் கபிலநிற வீழ்படிவு தோன்றியது | செம்புத்தகடு ஐதான சல்பூரிக்கமிலத்துடன் தாக்கமடைந்து வீழ்படிவை தோற்றுவித்தது |
| 4. செம்பு, நாக மின் வாய்களுக்கருகில் வாயுக்குமிழிகள் காணப்பட்டன | செம்பு தகட்டிலிருந்து ஐதரசன் வாயுவும் Zn தகட்டிலிருந்து ஒட்சிசன் வாயுவும் வெளியேறியது. |



ஐதான சல்பூரிக்கமிலம்

22. ஆய்வுக்கூடத்திலுள்ள பதார்த்தங்களில் வன்னமிலம், வனகாரம் என்பவற்றுக்கு உதாரணமாக அமைவது முறையே

(i) $HNO_3$, $Mg(OH)_2$ (ii) $CH_3COOH$, $Ca(OH)_2$
(iii) HCl, $AL(OH)_3$ (iv) $H_2SO_4$, NaOH

23. பின்வரும் செயற்பாடுகளில் வளிமண்டல கூறுகளின் மாற்றத்தின் மீது செல்வாக்குச் செலுத்தாத காரணி

(i) வாகனங்களில் ஏற்[illegible] எரிபொருள் தகனம்
(ii) யூரியா உரத்தின் உற்பத்திச் செயற்பாடு
(iii) ஈயம் கொண்ட பெற்றோலைப் பயன்படுத்தல்
(iv) கழிவுகளை மீள் சுழற்றிக்குட்படுத்தல்


24. சில பாறை வகைகள் கீழே தரப்பட்டுள்ள

(a) களிக்கல் (b) கிரனைட்டு (c) மாபிள் (d) சுண்ணாம்புக்கல்

மேலே தரப்பட்டுள்ள பாறை வகைகளின் அடையல் பாறைக்கு உதாரணமாக அமைவன.


(i) b,c (ii) b,d (iii) a,d (iv) c,d

25. படத்தில் காட்டப்பட்டுள்ள அலை இயக்கத்தில் O என்னும் துணிக்கை அடுத்த கணத்தில் எத்திசையில் அசையும்?





(i) A (ii) B (iii) C (iv) D

26. பின்வரும் தடைகள் அடங்கிய சுற்றில் அதிகளவு சமானத்தடை கொண்டது





27. நான்கு வில்லைகளும் அவற்றின் குவியத்தூரங்களும் கீழே தரப்பட்டுள்ளன.




மேலே தரப்பட்டுள்ள வில்லைகளில் கூட்டுநுணுக்குக் காட்டியில் பார்வைத் துண்டாக, பொருள் வில்லையாக பயன்படுத்துவதற்கு பொருத்தமானவை

(i) A, B (ii) B, D (iii) D, B (iv) C, D

28.




மேலே தரப்பட்டுள்ள உபகரணங்களின் பெயர்கள் முறையே

(i) pnp திரான்சிஸ்ரர், கொள்ளளவி, NOT தருக்கப்படலை, ANT தருக்கப்படலை, இருவாயி

(ii) npn திரான்சிஸ்ரர், கொள்ளளவி, AND தருக்கப்படலை, NOT தருக்கப்படலை, ஒளிகாலும் இருவாயி

(iii) pnp திரான்சிஸ்ரர், தடையி, இருவாயி, AND தருக்கப்படலை, NOT தருக்கப்படலை

(iv) npn திரான்சிஸ்ரர், தடையி, இருவாயி, NOT தருக்கப்படலை, AND தருக்கப்படலை

29. காபன் தடையியொன்றின் முதல் மூன்று வலையங்களின் நிறங்கள் பின்வரும் ஒழுங்கின்படி உள்ளன.

சிவப்பு, பச்சை, சிவப்பு (சிவப்பு - 2, பச்சை - 5) இத்தடையியின் பெறுமானம்

(i) 2.5KΩ (ii) 25Ω (iii) 50KΩ (iv) 50KΩ

30. ஒலியலையின் இயல்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

(அ) கடத்தப்படுவதற்கு ஊடகம் அவசியம்
(ஆ) குறுக்கலை வடிவில் கடத்தப்படும்
(இ $3.0 \times 10^8$ $ms^{-1}$ என்னும் வேகத்தில் செல்லும்

இவற்றில் நீர் மேற்பரப்பின் மீது கல்லொன்றை இட்டபோது தோன்றும் அலை கொண்டிருக்கும் இயல்புகள்

(i) அ, இ (ii) ஆ, இ மட்டும்
(iii) அ மட்டும் (iv) அ, ஆ


31. ஒளியின் மூலவர்ணங்களாகக் கருதப்படுவது

(i) சிவப்பு, மஞ்சள், பச்சை (ii) சிவப்பு, பச்சை, நீலம்
(iii) சிவப்பு, நீலம், மஞ்சள் (iv) கறுப்பு, பச்சை, நீலம்

32. நியூட்டன் அலகில் படிவகுக்கை செய்யப்பட்ட பாரமற்ற A, B என்னும் விற்றராசுக்கள் இரண்டு படத்தில் காட்டியவாறு இணைக்கப்பட்டுள்ளன. B இன் விற்றராசுடன் 5Kg திணிவு கட்டித் தொங்கவிடப்பட்டுள்ளது.

A, B வாசிப்புக்கள் முறையே

(i) 5N, 5N
(ii) 25N, 25N
(iii) 50N, 50N
(iv) 100N, 50N





33. 256HZ அதிர்வெண் கொண்ட இசைக்கவையொன்று வளியில் அதிரவிடப்பட்டது. வளியில் ஒலியின் வேகம் 340$ms^{-1}$ எனின் வளியில் ஏற்படும் ஒலியலையின் அலைநீளம்

(i) $\frac{256}{340}$ m (ii) $\frac{340}{256}$ m (iii) $340 \times 256$ m (iv) $\frac{340}{2 \times 256}$ m

34. மின்கடத்தப்படும் கடத்தியொன்றை அருகிலுள்ள படத்தில் X எனக் காட்டப்பட்டுள்ளது. இங்கு மின்னோட்டம் கடதாசிக்கு நிலைக்குத்தாக மேல்நோக்கி கடத்தப்படுகிறது. (இது ●என்னும் குறியீட்டின் மூலம் காட்டப்படுகிறது) கடத்தியைச் சூழவுள்ள காந்தப் புலத்தின் திசையை சரியாகக் காட்டும் திசைகாட்டி எது?

(i) A (ii) B (iii) C (iv) D




திசைகாட்டி

35. இரண்டாம் வகை நெம்புக்கு உதாரணங்களாக அமைவது

(i) மீன்தூண்டில், ஒற்றைச் சில்லுவண்டி
(ii) பாக்கு வெட்டி, ஒற்றைச் சில்லுவண்டி
(iii) நிறுத்தாடுவலை, குறடு
(iv) கத்திரிக்கோல், மீன்தூண்டில்

36. X, Y, Z என்னும் மூன்று மின்குமிழ்கள் 3V மின்கலங்களுடன் இணைக்கப்பட்டுள்ளதைப் படம் காட்டுகின்றது. மின்கலத்தின் ஒரு முனைவு செப்புக் கம்பியுடன் இணைக்கப்பட்டுள்ளது.




இச் சுற்று தொடர்பான உண்மையான கூற்று

(i) செப்புக் கம்பியை B யுடன் தொடுக்கும்போது X, Y மின்குமிழ்கள் நன்கு பிரகாசமாக ஒளிரும்.

(ii) செப்புக்கம்பியை C யுடன் தொடுக்கும் போது X, Y, Z மூன்றும் பிரகாசமாக ஒளிரும்.

(iii) செப்புக்கம்பியை எங்குஇணைத்தாலும் மீன்குமிழின் பிரகாசம் மாறுவதில்லை.

(iv) செப்புக்கம்பியை A க்கு தொடுப்பதன் மூலம் X நன்கு பிரகாசமாக ஒளிரும்.

37. அடிப்பிடிக்காத பாத்திரங்களில் உட்புறமாக பூசப்படுவதும் வெப்பத்திற்கு தாங்கக் கூடியதுமான பல்பகுதியம்

(i) பொலிஸ்டயிரின் (ii) பொலி அயிசோபிறின்
(iii) டெப்லோன் (iv) டெரிலீன்

38. நீர்பீடணவக்சீன் வழங்குதல் மூலம் இலங்கையிலிருந்து அகற்றப்பட்ட இரண்டு நோய்கள்

(i) நெருப்புக் காய்ச்சல், யானைக்கால் நோய்
(ii) போலியோ, குக்கல்
(iii) மலேரியா, சின்னமுத்து
(iv) மலேரியா, போலியோ

39. மனிதர்களினால் பறவையொன்றின் கூட்டை உணவாக எடுப்பதன் விளைவாக அழிவடையும் அபாயத்தை எதிர்நோக்கும் பறவை

(i) ஆட்காட்டி (கடற்புள்) (ii) மாடப்புறா
(iii) மீன்கொத்தி (iv) காட்டுக்கோழி

40. உலகில் ஏற்பட்டுள்ள அநேக சூழல் பாதிப்புகளுக்கு அடிப்படையாக அமைவ்து

(i) எரிபொருள் முடிவடைதல் (ii) தொற்று நோய்கள் பரவுவது
(iii) புவிவெப்பமடைதல் (iv) புவிநடுக்கம் ஏற்படுதல்

(மிகுதி நாளைய தினம்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இனமுரண்பாடுகளை களைவதற்கான வழி பிறக்குமா...?

இலங்கையின் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதியிலுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் வசித்து வருகிறார் 10 வயதான ஜென்சியா மேரி. தற்போது இலங்கையின் வட பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணி களைப் பார்த்து இவர் மிகவும் மகிழ் வடைகிறார். இலங்கை சிங்கள சமூகத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தென்னிலங்கையர்கள் போரில் வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளையும் வன்னியில் அமைக்கப்பட்டுள்ள புத்த விகாரையையும் பார்ப்பதற்காக தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

“பேருந்துகளில் பெருமளவான மக்கள் வருகை தருகின்றனர். சில வேளைகளில் வயது முதிர்ந்த பெண்கள் வெண்ணிற ஆடைகளை அணிந்தவாறு இங்கு வருகை தருகின்றனர். பாடசாலை விடுமுறை நாட்களில் எனது வயதை ஒத்த சிறுமிகளும் இங்கு வருகின்றார்கள். ஆனால், நான் ஒருபோதும் அவர்களுடன் உரையாடவில்லை. அவர்கள் என்னுடன் பேச முன்வருவதில்லை” என மேரி அதிருப்தியுடன் கூறுகிறார்.

பல ஆண்டுகளாக இலங்கையின் வட பகுதியில் அமைந்துள்ள வன்னியானது, வெளித்தொடர்புகள் அற்றுக்காணப்பட்டது. தனிநாடு கோரி தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் 30 ஆண்டுகளாக தொடரப்பட்ட உள் நாட்டு யுத்தமானது இலங்கையின் வடபகுதியில் உள்ள வன்னிப் பெருநிலப்பரப்பிலேயே அதிகம் இடம் பெற்றது. விடுதலைப்புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டதுடன் மே 2009 இல் யுத்தமும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. 2009இன் இறுதிப்பகுதியில் யுத்தம் இடம் பெற்ற பகுதியில் பொதுமக்கள் வாழ்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து ஆயிரக்கணக்கான தென்னிலங்கையர்கள் வன்னிப் பகுதிக்குச் சென்று பார்வையிடத் தொடங்கினர். முன்னைய யுத்தவலயத்திற்குச் சென்று பார்வையிடுவதன் மூலம் தென்னிலங்கைக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான இடைவெளி குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இதுவரை அதில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

சிங்கள மற்றும் தமிழ் சமூகத்தவர்கள் தற்போதும் வேறுபட்டே வாழ்கின்றனர். இவர்களுக்கிடையில் நெருங்கிய தொடர்பு பேணப்படுவதென்து மிக அரிதாகவே காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக வடக்குக்கு வரும் சிங்கள சுற்றுலாப் பயணிகள் தாம் உணவு தயாரிப்பதற்குத் தேவையான விறகுகளைக்கூட தம்முடன் எடுத்துவருகின்றனர். தாம் செல்லும் இடங்களுக்கான பாதைகளை கேட்பதற்கு மட்டுமே வன்னிவாழ் மக்களுடன் உரையாடுகின்றனர் என யாழ்ப்பாணத்தில் இயங்கும் பெண்களும் மற்றும் அவர்களுக்கான அபிவிருத்திக்கான மையத்தின் தலைவி தெரிவித்துள்ளார்.

“நீண்ட காலமாகத் தொடரப்பட்ட, குருதி சிந்தப்பட்ட யுத்தம் மற்றும் தனிமைப்படுத்தல் போன்றவற்றால் தென்னிலங்கையர்களுடன் வடக்கில் வாழும் தமிழ் மக்கள் தொடர்பைப் பேணுவது குறைவாகக் காணப்படுகிறது. இந்த யுத்தத்தால் ஏற்பட்ட கசப்புணர்வு முற்றாக மறக்கப்பட்டு இரு சமூகத்தவர்களும் ஒன்று சேர்வதற்கு நீண்ட காலமெடுக்கும். அதாவது அடுத்த தலைமுறைதான் இதனை நிறைவேற்றக்கூடும். இரு சமூகத்தவர்களையும் ஒன்று சேர்ப்பதற்கு எந்தவொரு உத்தியோகபூர்வ நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை” என ஓய்வுபெற்ற அரசாங்க அலுவலரும் யுத்தம் இடம்பெற்றபோதும் வன்னியில் வாழ்ந்தவருமான 61 வயதான மகேந்திரன் சிவகுமார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“வன்னியில் தற்போதும் இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகம் காணப்படுகிறது. வன்னியில் வாழும் பொதுமக்களின் விடயங்களிலும் இராணுவத்தினர் தலையீடு செய்கின்றனர். உள்நாட்டு போர் நிறைவுற்று மூன்றரை ஆண்டுகள் கடந்த நிலையிலும் வன்னிக் கிராமங்களில் வாழும் மக்களின் அன்றாட வாழ்க்கையில் குறிப்பாக பாடசாலை நிகழ்வுகளுக்கு சமூகமளித்தல் தொடக்கம் நீர்வழங்கல்வரை இராணுவத்தின் தலையீடு காணப்படுகின்றது” என அவர் குறிப்பிட்டார்.



“பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையில் தலையீடு செய்வதை இலங்கை இராணுவத்தினர் குறைத்தால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். இதன்மூலம் தாம் கண்காணிக்கப்படவில்லையென்ற உணர்வையாவது தமிழ் மக்கள் பெற்றுக்கொள்வர். ஆனால், குறுகிய காலத்தில் இவையெதுவும் இடம் பெறமாட்டாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமாகாணத்தில் பல பத்தாயிரக் கணக்கான படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் இந்த எண்ணிக்கை 80 ஆயிரம்வரை காணப்படலாம் எனவும் ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. இலங்கை இராணுவத்தினர் வடக்கில் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் தொடக்கம் உணவு விடுதிகள்வரை பல்வேறு வர்த்தக செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் வடக்கில் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள தொழில் வாய்ப்பற்றோர் தொழிலைப் பெற்றுக்கொள்வதற்கும் சவாலாக உள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் அறிக்கை வெளியிட்டுள்ளன. வடக்கிற்கு வரும் சிங்கள சுற்றுலாப் பயணிகள் கடமையில் ஈடுபட்டுள்ள இலங்கை இராணுவத்தினர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதையே அதிகம் விரும்புவதாக சிவகுமார் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிசைகளில்வாழும் மக்களின் குடியிருப்புகள் ஊடாக சுற்றுலாப் பேருந்துகள் அதிகம் பயணிக்கின்ற போதும் இந்த மக்கள் தொடர்பாக அவர்கள் அக்கறை செலுத்துவதில்லையென தெரிவித்துள்ளார். உண்மையில் இங்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அறிந்திருக்கவில்லை.

யுத்தத்தின்போது பொதுமக்கள் கொல்லப்பட்டமையானது, தேசிய மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்த ஒருபோதும் உதவாது எனவும் யுத்தத்தின்போது யார்வெற்றி பெற்றார்கள் யார் தோல்வியடைந்தார்கள் என்கின்ற கதை இன்னமும் தொடரக்கூடாது இதில் பாதிக்கப்பட்டவர்களின் நலன்கள் கவனிக்கப்படவேண்டும் எனவும் அங்குள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

“யுத்தம் வெற்றி கொள்ளப்பட்டுவிட்டதாக இலங்கை அரசாங்கம் அறிவிப்பதற்கு முன்னர் 40 ஆயிரம் வரையான பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா. வல்லுனர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் மற்றும் சிங்கள சமூகத்தவர்களிடையில் போதியளவ தொடர்புகள் பேணப்படாத நிலையில் மீளிணக்கப்பாடு வெற்றிபெற மாட்டாது” என தேசிய சட்டவாளர் அமைப்பான சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை அமைப்பைச் சேர்ந்த றுக்கி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதானது, இங்கு எல்லாம் சரியாக நடக்கிறது என்கிற பொய்யான விளக்கப்பாட்டைக் கொடுத்துள்ளது. தென்னிலங்கையில் வாழும் மக்களை தற்போதைய அதிபர் திருப்திப்படுத்துவதுபோன்று இவ்வாறான பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் வடக்கில் வாழும் தமிழ் மக்களை திருப்திப்படுத்த முடியவில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

“இலங்கையில் மீளிணக்கப்பாட்டை உருவாக்குவதில் புலம்பெயர் மக்கள் முக்கிய பங்காற்றமுடியும்” என அனைத்துலக தொண்டு நிறுவனத்தின் இயக்குனரான யோகன் றொபேட் தெரிவித்துள்ளார். ஜனவரி 2011 இலிருந்து இலங்கைக்கு மூன்று முறை வருகை தந்து நிகழ்ச்சித் திட்டங்களை பார்வையிட்ட றொபேட் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த ஆகஸ்டில் கொழும்பைத் தளமாகக்கொண்டியங்கும் சிறிலங்கா யுனிற்ஸ் என்கிற அரசசார்பற்ற நிறுவனமானது தமிழ் மற்றும் சிங்கள சமூகங்களைச்சேர்ந்த இளைஞர்களை ஒன்றிணைத்து யாழ்ப்பாணத்தில் கருத்தரங்கொன்றை மேற்கொண்டது.

“ஒவ்வொரு மாதமும் நாட்டில் வாழும் 25 இளைய தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு தேசிய சுற்றுப் பயணமொன்றை எமது நிறுவனம் மேற்கொள்கிறது. எமது நிறுவனத்தில் பத்தாயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 30 சதவீதமானோர் வடக்கைச் சேர்ந்தவர்களாவர்.

இலங்கையில் வாழும் பல்லினங்களைச் சேர்ந்த இளையோர்களிடையில் பிரிவினையை விலக்கி அனைவரையும் ஒற்றுமையாக்குவதே எமது நிறுவனத்தின் பிரதான நோக்கமாகும்” என அந்நிறுவனத்தின் தலைவர் பிரசன்ன டி விசேர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு தொடரப்பட்ட இனவன்முறையை எவ்வாறு முடிவுக்கு கொண்டு வருவதெனவும் அதனை எதிலிருந்து ஆரம்பிப்பதெனவும் ஆர்வலர்களும் அதிகாரிகளும் யோசிக்கின்றனர். இலங்கை அரசாங்கத்தால் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவானது 18 மாத கால விசாரணையை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தது.

ஜனவரி 2009 தொடக்கம் மே 2009 வரை 2635 பேர் காணாமற் போயுள்ளதாக இலங்கை அரசாங்கம் பதிவு செய்துள்ளது. டிசெம்பர் 2009 தொடக்கம் 2012 நடுப்பகுதி வரை காணாமற்போன 747 சிறுவர்கள் தொடர்பான சம்பவங்களை ஐ.நா. சிறுவர் நிதியம் பதிவு செய்துள்ளது.

காணாமற்போனோர், கொல்லப்பட்டோர் மற்றும் ஏனைய மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் பதிலளிக்க வேண்டும் என மனித உரிமைச் செயற்பாட்டாளரான பெர்ணாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் பிரதான தமிழ்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது “மீளிணக்கப்பாட்டை உருவாக்குவதற்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் எனக் கோரியிருந்ததாகவும், இனவன் முறையை மேலும் வளர்க்கக் கூடிய பாரபட்சப்படுத்தல் நிறுத்தப்பட்டு, தமிழ் மக்களுக்கான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்” எனவும் தமிழ்த் தேசியத் தலைவர்கள் கோரியிருந்தனர்.

ஆனால் 1987 இல் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாணங்களுக்கான அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பதற்கு இலங்கை அரசாங்கத்தில் உள்ள சில செல்வாக்கு மிக்க தரப்பினர் தடையாக உள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பயனுள்ள வினைத்திறன் மிக்க அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட்டால், மீளிணக்கப்பாட்டை உருவாக்குவதற்கான ஏனைய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் எனவும் பெர்ணான்டோ குறிப்பிட்டுள்ளார்.

ஐ.ஆர்.ஐ. என் -ஆய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்மதியை விண்ணுக்கு அனுப்புவதற்கு மக்களின் பணம் பயன்படுத்தவில்லை

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

(கொழும்பு)

விண்வெளிக்கு செய்மதியினை அனுப்புவதற்கு அரசாங்கம் பொது மக்களினதோ பாராளுமன்றத்தினதோ பணத்தை செலவு செய்யவில்லை. எதனையும் அரசியல் கண்ணோட்டத்துடன் பார்த்துப் பழகிவிட்ட எமது எதிர்க்கட்சியினர் செய்மதியினையும் அரசியல் கண்ணோட்டத்தில் பார்வையிடுவது அவர்களது அறியாமையையும் இயலாமையையும் எடுத்துக் காட்டுவதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று முன்தினம் காலை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அரசாங்கம் பொது மக்கள் மற்றும் பாராளுமன்றத்தின் பணத்தில் விண்வெளிக்கு செய்மதியனுப்பியுள்ளதாக குற்றஞ்சாட்டினார்.

இது குறித்து அமைச்சரிடம் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை விண்வெளிக்கு செய்மதியினை அனுப்பி வைத்துள்ளமையானது வரலாற்றில் பதியப்பட வேண்டிய விடயம். இது விஞ்ஞானத்துறையில் நிலை நாட்டியுள்ள சாதனை. இலங்கை முன்னேற்றப் பாதையில் செல்லும் இந்த தருணத்தில் இதனையிட்டு பெருமை கொள்ளாது அரசியல் கண்ணோட்டம் கொண்டு பார்த்து அதனை மட்டம் தட்டி வருவது உண்மையில் கவலைக்குரிய விடயமாகும்.

ஜனாதிபதியின் புதல்வர் இதன் பணியில் மும்முரமாக ஈடுபட்டதன் விளைவாகவே எதிர்க்கட்சியினர் அவதூறுகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். நரட்டின் முன்னேற்றம் தொடர்பில் ஏதாவதொரு நல்ல காரியம் நடத்தப்படுமானால் அதனை யார்? எந்த வயதினர்? எப்படி செய்கிறார்கள் என்பதை ஆராய்ந்து பாராட்டத் தெரிந்திருக்க வேண்டும்.

உண்மையில் இந்தத் திட்டத்திற்காக அரசாங்கம் எந்த செலவீனத்தையும் மேற்கொள்ளவில்லை. பொதுமக்களினதோ பாராளுமன்றத்தினதோ பணம் இதற்காக செலவு செய்யப்படவில்லை. எதனையும் அரசியல் கண்ணோட்டத்துடனேயே பார்த்து பழகிவிட்ட எதிர்க்கட்சியினர் விண்வெளிக்கு அனுப்பிய செய்மதியினையும் அரசியலாக பார்ப்பது அவர்களது இயலாமையின் வெளிப்பாடேயாகுமென்றும் அமைச்சர் இதன் போது கூறினார். (அ-2)

# நுழைவாயில் வளைவு முகப்பு அமைப்பு

(மானிப்பாய்)

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு நுழைவாயில் வளைவு முகப்பு ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இதனுடன் இணைத்து பாதுகாப்பு உத்தியோகத்தர் பணிமனை ஒன்றும் அமைக்கப்படுகிறது.

இவ் வளைவு முகப்பினை பாடசாலையின் பழைய மாணவியர் சங்கமும் பெற்றோர்களும் இணைந்து பல இலட்சம் ரூபா செலவில் நிர்மாணித்து வருவதாக பாடசாலை அதிபர் எஸ்.ஜெயவீரசிங்கம் அறிவித்துள்ளார். (அ)

# பொன்சேகாவின் ஊடக இணைப்பாளர் கைது

(கொழும்பு)

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவின் ஊடக இணைப்பாளர் சஞ்சீவ சமரசிங்கவை புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

ராகமவில் அமைந்துள்ள அவரது வீட்டில் வைத்து சமரசிங்கவை புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

என்ன காரணத்திற்காக அவர் கைது செய்யப்பட்டார் என்பது பற்றி இன்னமும் வெளியிடவில்லை. இதேவேளை, சட்டவிரோதமான முறையில் சமரசிங்கவை புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளதாக அவரது சட்டத்தரணி சிறிலால் லக்திலக்க தெரிவித்துள்ளார்.

புலனாய்வுப் பிரிவினர் ஏதேச்சதிகாரமாக சமரசிங்கவை கைது செய்து அழைத்துச் சென்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சீரற்ற காலநிலையால் எலிக்காய்ச்சல் பரவும்

## சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

நாடு முழுவதிலும் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக எலிக்காய்ச்சல் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள வைத்தியசாலையில் எலிக்காய்ச்சல் நோயாளிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பதிவாகியுள்ளனர். நோய்க்குறிகளை உடனடியாக அடையாளம் காணா விட்டால் மரணம் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்காய்ச்சலின் போது கடுமையான தலைவலி, தசைவலி, கடுமையான காய்ச்சல், சிறுநீரின் நிறமாற்றம், சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல் போன்ற நோய்க்குறிகள் தோன்றும். அதுபற்றி கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

உடனடியாக சிகிச்சை பெற்றுக் கொள்ளாவிட்டால் மூளை உள்ளிட்ட உடல் பாகங்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

ஹெரோயின் வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் 498 கிராம் ஹெரோயினுடன் கொழும்பு பம்பலப் பிட்டி பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். இதனுடைய பெறுமதி சுமார் 40 இலட்சம் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படை மத்திய நிலைய அதிகாரிகளினால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைக்காக சந்தேக நபர் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ-2)




★ 1781-கூலிகளை ஏற்றிச் சென்ற சொங் (Zong) என்ற கப்பல் மாலுமிகள் காப்புறுதிக்காக 133 ஆபிரிக்கர்களை கொன்று கடலுக்குள் எறிந்தனர்.

★ 1830-போலந்தில் ரஷ்யாவின் ஆட்சிக்கெதிராக புரட்சி வெடித்தது.

★ 1855-துருக்கியில் தாதியர் பயிற்சிக்காக புளோரன்ஸ் நைட்டிங்கேல் நிதியம் நிறுவப்பட்டது.

★ 1877-தோமஸ் அல்வா எடிசன் போனோகிராஃப் என்ற ஒலிப் பதிவுக் கருவியைக் முதற்தடவையாகக் காட்சிப்படுத்தினார்.

★ 1915-கலிபோர்னியாவில் சாண்டா கட்டலீனா தீவின் பல முக்கிய கட்டடங்கள் தீயில் எரிந்தன.

★ 1922-ஹவார்ட் கார்ட்டர் பண்டைய ,எகிப்தின் துட்டன்காமுன் மன்னனின் கல்லறையை பொதுமக்களின் பார்வைக்கு திறந்து விட்டார்.

★ 1929-ஐக்கிய அமெரிக்காவின் ரிச்சார்ட் பயேர்ட் தென்முனை மேல் பறந்த முதல் மனிதரானார்.

★ 1945-யூகொஸ்லாவிய சமஷ்டி மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1947-பாலஸ்தீனத்தைப் பிரிப்பதென ஐ.நா. பொதுச் சபை முடிவெடுத்தது.

★ 1950-வட கொரியா மற்றும் சீனப் படைகள் ஐ.நா. படைகளை வட கொரியாவிலிருந்து வெளியேறும்படி செய்தன.

★ 1961-நாசாவின் மேர்க்குரி- அட்லஸ் 5 விண்கலம் சிம்பன்சி ஒன்றை ஏற்றிக் கொண்டு விண்ணுக்கு அனுப்பப்பட்டது. இது பூமியை இரு தடவைகள் சுற்றி வந்து புவேர்ட்டோ ரிக்கோவில் இறங்கியது.

★ 1982-ஐ.நா. பொது அவை சோவியத் படைகளை ஆப்கானிஸ்தானில் இருந்து உடனடியாக விலகும்படி சோவியத் ஒன்றியத்தைக் கேட்டது.

★ 2006- அணுவாயுதங்களை எடுத்துச் சென்று 700 கி.மீ. தூரம் உள்ள இலக்குகளைத் தாக்கக்கூடிய ஷாகீன் 1 என்ற ஏவுகணை சோதனையை பாகிஸ்தான் வெற்றிகரமாக நடத்தியது.

### பிறப்புக்கள்

★ 1889- எட்வின் ஹபிள், வானிலையாளர் (இ.1953)

★ 1908-என்.எஸ்.கிருஷ்ணன், தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகர் (இ.1957)

### இறப்புகள்

★ 1989-மருதகாசி, திரைப்படப் பாடலாசிரியர் (பி.1920)

★ 1993- ஜே.ஆர்.டி.டாடா, இந்தியாவின் முதன்மையான தொழிலதிபர்களுள் ஒருவர், இந்திய வானூர்திப் போக்குவரத்தின் முன்னோடி (பி.1904)

★ 2008-ஜோர்ன் அட்சன், டென்மார்க் கட்டடக் கலைஞர் (பி.1918)

**என்.எஸ்.கிருஷ்ணன்**

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகரும் பாடகரும் ஆவார்.



### வாழ்க்கைச் சுருக்கம்

நாகர்கோவில் அருகே ஒழுகின சேரியில் 1908 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் திகதி கலைவாணர் பிறந்தார். இவர் சாதாரண வில்லுப்பாட்டுக் கலைஞராக தனது கலையுலக வாழ்வை ஆரம்பித்தார். பின்னர் நாடக துறையில் நுழைந்தர்ர். சொந்தமாக நாடகக்கம்பனியையும் நடத்தினார். அப்போது தமிழகத்தில் திரைப்படத்துறை பிரபலமடைந்தது. அதிலும் நுழைந்து தமிழ் திரைப்படத் துறையில் முன்னணி நகைச்சுவை நடிகராக வலம் வந்தார்.

திரைப்படத் துறையில் இவர் அறிமுகமான திரைப்படம் 1936 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த சதிலீலாவதி ஆகும்.

ஏறத்தாழ 150 படங்களில் நடித்தார். சொந்த குரலில் பல பாடல்களை பாடியுள்ளார். பிறர் மனதைப் புண்படுத்தாமல் பண்படுத்தும் முறையில் நகைச்சுவையைக் கையாளும் கலை உணர்வு மிக்கவர்.

### மறைவு

1957 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 30 ஆம் திகதி தனது 49 ஆவது வயதில் கலைவாணர் காலமானார்.

### கலைவாணர் அரங்கம்

தமிழ்நாடு அரசு கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் நினைவாக சென்னையில் உள்ள அரசு அரங்கத்திற்கு கலைவாணர் அரங்கம் என பெயர் சூட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் அமைதிக்கு குந்தகம் விளைவிக்க அனுமதியளியோம்

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அறிக்கை

(கொழும்பு)

**நாம் அனைவரும் தூரநோக்குடனும் அமைதியாகவும் சிந்தித்து ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

பதுளை ஜும்மா பள்ளிவாசலில் இடம் பெற்ற விசேட கூட்டத்தை முன்னிட்டு அனுப்பி வைத்துள்ள விசேட செய்தியிலேயே அவர் இதனைக் தெரிவித்திருப்பதாக ஊவா மாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான சுஜீவ ஜயசிங்க குறிப்பிட்டார்.

அவர் அனுப்பி வைத்திருந்த அந்த விசேட செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது,

நாட்டின் சகல இன மக்களும் அமைதியாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலை நாட்டில் நிலவும் தற்போதைய கால கட்டத்தில் பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் அதற்கு குந்தகம் ஏற்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

பதுளை நகரில் காலா காலமாக சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் அந்நியோன்னியமாக வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் அரசாங்கத்தை சிரமத்துக்கு உட்படுத்தும் வகையில் ஒருசில விஷமிகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை வன்மையாக கண்டிக்கின்றேன்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டில் சகல இனங்களும் ஒன்றாக வாழக்கூடிய அமைதியான சூழலை உருவாக்கியுள்ள இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தை சிரமத்துக்கு உட்படும் வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் ஒரு போதும் இடமளிக்கமாட்டாது.

பதுளை நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இவ்வாறான அருவருக்கத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள் எமது சுதந்திரக்கட்சியில் இருந்து எப்போதோ விரட்டப்பட்டவர்கள் பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் முஸ்லிம்கள், தமிழர்கள், சிங்களவர்கள் என்ற பாகுபாடு இன்றிஅனைவரினதும் உரிமைகளையும் அரசாங்கம் பாதுகாக்கும்.

சமாதானத்துக்கு குந்தகம் விளைவிப்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும். கடந்த கால தேர்தல்களில் பதுளை வாழ் முஸ்லிம்கள் அரசாங்கத்துக்கு முழு ஆதரவையும் வழங்கியுள்ளமை எமக்கு நன்றாக புரியும் என்றார். (அ-2)



தேசிய மரநடுகை திட்டத்தின்கீழ் சங்கத்தானை ஸ்ரீமுருகன் ஆலய நிர்வாகத்தினரும் சனசமூக நிலையத்தினரும் இணைந்து ஆலய வளாகத்தில் மரம் நாட்டும் நிகழ்வை அண்மையில் மேற்கொண்டனர். இந்நிகழ்வில் ஆலய நிர்வாக சபைத் தலைவரும் சாவகச்சேரி நகரசபையின் உப தவிசாளருமான கு.சதாசிவமூர்த்தி மரக் கன்றை நாட்டுவதையும் உறுப்பினர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:- சாவகச்சேரி செய்தியாளர்)

# கணபதி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை தினமும் காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 9.30 மணி வரை இலட்சார்ச்சனை கணபதி ஹோமம் என்பன நடைபெறவுள் ளன.

அத்துடன் தினமும் முற்பகல் 9.30 மணிக்கு விநாயகர் புராணம் ஓதுதலும் நடைபெறும். 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு மஹாபூர்ணாகுதி சங்காபிஷேகம், பஞ்சமுகர் திருவீதி அருட்பவனி என்பன நடைபெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (அ-9)

# தறப்பாள் விரித்து கற்றலில் ஈடுபடும் முன்பள்ளி சிறார்கள்

## வண்ணன் முன்பள்ளியின் பரிதாபம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள வேணாவில் கிராமத்தில் இயங்கும் வண்ணன் முன்பள்ளி அடிப்படை வசதிகள் எதுவுமின்றி இயங்கி வருவதால் மாணவர்கள் பெரும் சிரமங்களுடன் கல்வி கற்று வருகின்றனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இம் முன்பள்ளியானது மீள்குடியேற்றத்தின் பின் இவ்வாண்டு முதல் இயங்கி வருகின்றது.

இம் முன்பள்ளியில் 36 மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலையில் முன்பள்ளிக் கட்டடமானது போரினால் முழுமையாக சேதமடைந்து காணப்படுவதனால் மாணவர்கள் மரநிழலில் தறப்பாளை விரித்து விட்டு அதிலிருந்தே கல்வி கற்று வருகின்றனர். மழை காலத்தில் அவ்வாறும் கற்க முடியாத பரிதாப நிலை உள்ளது.

இம் முன்பள்ளிக்கு மின்சாரம் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மலசலகூடம் உள்ளபோதும் பாவிக்க முடியாத நிலையில் உள்ளதனால் மாணவர்களின் பெற்றோர்களை தொலைபேசி மூலம் அழைத்தே மாணவர்களை வீட்டிற்கு அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தநிலை உள்ளது.

விளையாட்டு முற்றம், விளையாட்டு உபகரணம் என்பன இன்மையால் மாணவர்களது விளையாட்டு செயற்பாடு ஸ்தம்பிதம் அடைந்து காணப்படுகிறது. குடிநீர்க்கிணறு உண்டு. அதற்கான வெளிப்படிக்கட்டு அமைக்கப்படவில்லை. நீர்த்தாங்கி இப் பாடசாலைக்கு இல்லை. குறிப்பாக தளபாடவசதி இன்மையால் மாணவர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

முன்பள்ளிக்கு சுற்றுவேலி இன்மையால் கால்நடைகள் பாடசாலையை அசுத்தம் செய்கின்றன. முன்பள்ளிக்கு மூன்று மொழிகளிலுமான பெயர்ப்பலகை இல்லை. எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து மாணவர்களது கல்விக்கு உதவவேண்டுமென மாணவர்களது பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

# நட்டத்தில் இயங்கிய 5 நிறுவனங்கள் அரசாங்கத்தினால் பொறுப்பேற்பு

நட்டத்தில் இயங்கும் சார்மஸ் தானிய களஞ்சிய சபை உட்பட ஐந்து நிறுனங்களை அரசாங்கம் பொறுப்பேற்கவுள்ளது.

நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றும் அரசின் திட்டத்திற்கமைய மேற்படி ஐந்து நிறுனங்களும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது என நிதி அமைச்சின் செயலர் கலாநிதி பீ.பி. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதற்கமைய சார்மஸ் தானிய களஞ்சிய சாலை, இன்டர் டிரேட் லங்கா தனியார் நிறுவனம், லங்கா டிராக்டர்ஸ் நிறுவனம், சுச்சீ நெப் திட்ட தனியார் நிறுவனம், மரமுந்திரிகை கூட் டுத்தாபனம் ஆகியவற்றின் சொத்துக்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் செயலர் தெரிவித்தார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் கண்காணிப்பின் கீழும் ஆலோசனையின் படியும் பொறுப்பேற்கப்பட்டுள்ள மேற்படி 5 நிறுவனங்களும் மீண்டும் இலாபமீட்டும் நிறுவனங்களாக கட்டியெழுப்பப்படும்.

இதற்கு மேலதிகமாக நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் மேலும் 12 நிறுவனங்கள் முதலீட்டாளர்களுக்காக விட்டுக்கொடுக்கப்பட்டுள்ளன.

சைனோ டெக்ஸ் லங்கா நிறுவனம், ஜெக் லங்கா லிமிட்டெட், பிளைமவுன் தனியார் கம்பனி, டீஸ் அப்பரல், ஹைய் பெஷன் காமண்ட்ஸ், ஆதம் ஜீ எக்ஸ்ரெக்ஷன் கம்பனி, வெண்டன் லங்கா கம்பனி, ரீகன் லங்கா கம்பனி, கொம்போசசிட் டவர் சொலியூஷன் கம்பனி, ஹெல்த் பிராம் உற்பத்தி கம்பனி, ஸ்ரீ சிரக் கம்பனி, கொண்டிநேடல் வனஸ்பதி வர்த்தக நிறுவனம் போன்றவை முதலீட்டாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும் மக்கள் விவகாரங்களுக்கென நான்கு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# சுப்ரீம் சாட்-1 இலங்கை கொடியை விண்ணுக்கு எடுத்துச் சென்றுள்ளது

## ஜனாதிபதி பெருமிதம்

இலங்கை கொடியை விண்ணுக்கு ஏந்திச் செல்லும் வரலாற்று சந்தர்ப்பம் சுப்ரீம் சாட்-1 என்ற தொலைத்தொடர்பு செயற்கைக் கோள் ஏவப்பட்டதன் மூலம் ஈடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவில் செயற்கைக்கோள் மற்றும் செய்மதித்துறையில் இலங்கை முன்னிலை பெற இது ஆரம்பமாக அமையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இங்கையில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் முயற்சியால் சுப்ரீம் சாட்-1 என்று பெயரிடப்பட்ட இலங்கையில் முதல் செய்மதி நேற்று முன்தினம் விண்ணில் ஏவப்பட்டுள்ளது.

சீனாவில் தயாரிக்கப்பட்ட இந்த தொலைத் தொடர்பு செய்மதி ஷி ஜாங் விண்வெளி நிலையத்திலிருந்து இலங்கை நேரப்படி 3.43 இற்கு விண்ணில் ஏவப்பட்டது.

இதேவேளை, இலங்கையை பொறுத்த வரை இது ஒரு பெரிய முன்னேற்றம் என்று சுப்ரீம் குழுமத்தின் தலைமை அதிகாரி விஜித் பீரிஸ் தெரிவித்தார்.

தொலைக்காட்சி டிடி எச் சேவைகளை அளிக்க இச் செய்மதி முக்கியமாக பயன்படுத்தப்படும். இலங்கையில் கடந்த சில ஆண்டுகளாகவே செயற்கைக்கோள் தொலைக் காட்சிகளின் எண்ணிக்கையும் அலைபேசிகளை உபயோகிப்போரின் எண்ணிக்கையும் அதிகமாகிக் கொண்டிருக்கும் வேளையில் தொலைத்தொடர்பு செயற்கைக்கோளை வர்த்தக ரீதியாக இயக்குவது இலாபம் தரும் முதலீடாக இருக்கும் என்று தி சுப்ரீம் குரூப் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

320 மில்லியன் டொலர்கள் செலவில் 2015 ஆம் ஆண்டுக்குள் மூன்று செய்மதிகளை ஏவ இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அதேநேரம் கண்டியிலும் விண்வெளி ஆய்வு தொடர்பாக சில கட்டமைப்புக்களை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (அ-2)

# வண்ணக்கோலங்கள் கலைநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றமும் சுனேரா நிறுவனமும் இணைந்து நடத்தும் வண்ணக் கோலங்கள் எனும் கலை நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இல .286,பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். இந்நிகழ்ச்சிகளை உடுவில் ஆர்க் மாற்று ஆற்றலுடைய பிள்ளைகள் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை மாணவர்கள் மீது தாக்குதல்; யாழில் ஜனநாயகம் என்பது இதுதானா?

## ஜ.ம.முன்னணி கேள்வி

(கொழும்பு)

பல்கலைக்கழக சுற்று வட்டாரத்தில் நேற்று முன்தினமும் நேற்றைய தினமும் அகிம்சை போராட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை வன்மையாக கண்டிப்பதாக தலைவர் மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான சி.பாஸ்கரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கண்டன அறிக்கையொன்றை விடுத்துள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

அரசு ஜனநாயகம் நிலவுவதாக கூறிக் கொண்டிருக்கும் வேளையில் பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல் சம்பவம் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும். மாணவர்களை தாக்கியவர்களை ஏன் கைது செய்யவில்லை. அரசாங்கம் தாக்கியவர்களை கைது செய்யாதவிடத்து அரசின் ஜனநாயகத்தின் போலித்தன்மை உலகுக்கு வெளிச்சமாகும்.

இவ்வேளையில் அரசு உடனடியாக செயலில் இறங்கி தாக்கியவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இல்லையேல் அரசின் மேல் குற்றச்சாட்டு விழுவது தடுக்க முடியாது போய் விடும்.

தொடர்ந்து ஜனநாயக வழியில் நேற்று முன்தினம் அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர் மீது பொலிசார் தடியடி ,கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொண்டனர். ஜனநாயக பண்புள்ள நாட்டில் ஏற்புடையதற்றதும் நியாயம் கற்பிக்கக் கூடியதும் ஒன்றல்ல.

கடந்த காலங்களில் நெல்லியடியில் நடந்த அகிம்சைப் போராட்டத்தில் கூட நூற்றுக்கணக்கான பொலிஸார் புடைசூழ நின்றபோது மோட்டார் சைக்கிளில் புலிக்கொடியுடன் வந்தவர் இன்றுவரை கைது செய்யப்படவில்லை. அதேபோல இந்த தாக்குதல் சூத்திரதாரியும் கைது செய்யப்படாமல் இருப்பது தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

கொழும்பு மாநகரசபையில் நேற்று முன்தினம் ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் தாக்கப்பட்டதைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்ட வேளையில் மீண்டும் ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் மீது தாக்குதல் நடை பெற்றது ஏற்றுக் கொள்ளக் கூடியதும் ஜீரணிக்க முடியாததொன்றாகும். வரலாற்றுத் தவறுகள் இது முதல் தடவை என்று இல்லாத போதும் கூட மீண்டும் மீண்டும் தவறு இழைப்பது கடுமையாக கண்டிக்கப்பட வேண்டிய தொன்றாகும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# மொழியமைப்பு நிலையம் நேற்று திறந்து வைப்பு

தேசிய மொழி அமைப்பு மத்திய நிலையம் நேற்றைய தினம் தொடக்கம் தனது செயற்பாட்டை ஆரம்பித்துள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒன்றிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மொழி தொடர்பில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு வழங்கும் வகையில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து அரச நிறுவனங்களிலும் தமது தாய்மொழியில் கடமையாற்றும் போது ஏற்படும் சிக்கல்களை மொழி அழைப்பு மத்திய நிலையத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அமைக்கப்பட்டுள்ள புதிய மொழி அழைப்பு மத்திய நிலையம் தொழில்நுட்ப ரீதியில் உயர்ந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து வேளாளர்
நட்சத்திரம்: திருவாதிரை 3
உயரம்: 5' 9"
கி.பா: 43.5
தொழில்/ தகைமை : BSc Engineer MSc Engineer UK Not P.R
தொ. இல : B -328

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2
உயரம்: 5' 2"
கி.பா: 44 .5
தொழில்/ தகைமை: A/L (வர்த்தகம்)
தொ. இல : G - 530

பிறப்பு: 1971 இந்து வேளாளர்
நட்சத்திரம்: திருவோணம் 3
உயரம்: 5' 8"
கி.பா : 39.25, 12 இல் செவ்.
தொழில்/ தகைமை : Diploma computing Applications Sales Manager, Accounts
தொ. இல : B - 329

பிறப்பு: 1977 இந்து வேளாளர்
நட்சத்திரம்: சித்திரை 3
உயரம்: 5' 4"
கி.பா: 22.5
தொழில்/ தகைமை: BFa(Hons) Dip in. Edu ஆசிரியை
தொ. இல : G - 531

பிறப்பு: 1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்: பூராடம் 1
உயரம்: 5'
கி.பா: 15 .75
தொழில்/ தகைமை:A/L முகாமையாளர்
தொ. இல : B - 330

பிறப்பு: 1981 RC குருகுலம்
நட்சத்திரம்: சித்திரை 2
உயரம்: 5'3"
கி.பா: 71
தொழில்/ தகைமை: A/L,
தொ. இல : G - 532

பிறப்பு: 1984 இந்து (விஸ்வப்பிரம்மா)
நட்சத்திரம்: மகம் 3
உயரம்: 5' 4"
கி.பா:18.5
தொழில்/ தகைமை: விவசாய டிப்ளோமா பட்டதாரி (தொழில்நுட்ப விற்பனை பிரதிநிதி)
தொ. இல : B - 331

பிறப்பு: 1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்: பரணி 3
உயரம்: 5' 3"
கி.பா: 11
தொழில்/ தகைமை: A/L,
தொ. இல : G - 537

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி




ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான 60 வருட நட்புறவைக் கொண்டாடும் முகமாக
ஜப்பானியத் தூதரகம் ஜப்பான் பவுண்டேஷனுடன் இணைந்து வழங்கும்



றண்டூகா RANDOOGA
ஒலிகளின் வழியான கதையாடல்
வித்தியாசமான ஒரு ஜாஸ் இசை அனுபவம்

தொடர்பாடல் வலுவையும்கற்பனை ஆற்றலையும்
மேம்படுத்தும் ஒரு முறையே றண்டூகா

புதிய வகைத் தொடர்பாடல் நிறைந்த புதிய உலகுநோக்கி
புத்தெழுச்சிமிக்க ஒரு பயணம்



மசாஹிகோ சதோ
Masahiko Satoh
பியானோ
&
பிரதீப் ரத்னாயக்கா
Pradeep Ratnayake
சித்தார்

அகிகோ உசுகி (குரல்) | கீ வடா (பேர்குசன்) | ஐசக் சிமித் (டபிள் பேஸ்)
Akiko Uesugi | Kei Wada | Isaac Smith

ஆகியோருடன் யாழ்ப்பாண இசைக்கலைஞர்கள் கூட்டிணைந்து
வழங்குகின்றார்கள்

காலம் : கார்த்திகை 29, 2012 பி.ப. 4.00 மணி
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

"மனிதர்களின் தனித்துவங்களையும் அவரவர்களின் படைப்பாக்க உந்தல்களையும்
ஆர்வத்துடன் புரிந்து கொள்வோம்"
உங்கள் பெறுமதியான பொழுதை இந்த நிகழ்வுக்காய் தந்திடுங்கள்.

தொடர்புகட்கு: 071 5700340
அனுமதி இலவசம்

அனுசரணையாளர்
ஜப்பான் நிறுவகம்
JAPANFOUNDATION

(சி-1618)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் எதிர்நோக்கும் பரீட்சைகால பதட்டம்

மனிதன் என்கிற பிராணி வெறும் ஜடம் மட்டுமல்ல அவ்ன் உயிரோட்டமுள்ள உணர்வோட்டமுள்ள சமூகப்பிராணி. சமூக வாழ்க்கையில் மனிதன் பலருடன் இடைவினை கொள்கிறான். இதன் காரணமாக/நிமிடத்திற்கு நிமிடம் அவனது கருத்தோட்டம் மாற்றமடைகின்றது. அந்த வகையில் எண்ணங்களும் சிந்தனைப் போக்கும் மனவெழுச்சிகளும் மாற்றமடைந்து செல்கின்றன.

மனப்பந்தாட்டம் என்பது தனித்து இருக்காது. அதற்கு ஒரு குடும்பம் உண்டு. அது என்னவென்றால் கலக்கம், தடுமாற்றம், துயரம், திகில், நடுக்கம் போன்றவைகளுடன் இருக்கும். ஆரம்பத்திலேயே பதட்டத்தை கிள்ளி எறிந்துவிட்டால் இந்தக் குடும்பமே நம்மிடம் வந்து ஒட்டிக் கொண்டு உறவாட ஆரம்பிக்கும். தன்னம்பிக்கை இல்லாத தன்னுடைய திறமைகளை முழுமையாக புரிந்து கொள்ளாத கூச்ச சுபாவமுள்ள தாழ்வுணர்ச்சி கொண்ட மாணவருக்கு பதட்டம் வரும்.

எந்தவித முன்னேற்பாடுமின்றி ஒரு செயலில் ஈடுபடும் போது நிச்சயம் பூதட்டம் ஏற்படும். இதனால் மேற்கொள்ளும் செயற்பாடும் பயனிழந்து பதட்டத்தின் விளைவாக தோல்வியே ஏற்படும். இப்பதட்டம் பெரும்பாலும் பல்வேறு உடல் நோய்களை போன்று மாயத்தோற்றம் அளிக்கும். பரீட்சை மற்றும் நேர்காணலின் போது பெரும்பாலானவர்களுக்கு உடல் நோய்களை போன்று மாயத்தோற்றம் அளிக்கும். பரீட்சை மற்றும் நேர்காணலின் போது பெரும்பாலானவர்களுக்கு பதட்டம் ஏற்படுகின்றது. அளவோடு இருக்குமாயின் அது ஆக்கபூர்வமான செயலுக்கும் முன்னேற்றத்திற்கும் உதவியாய் இருக்கும். அதுவே அளவுக்கு அதிகமாய் இருக்குமாயின் பாதிப்பாய் மாறி விடும். மேலும் எல்லாம் இழந்து விட்டது போன்ற உணர்வையும் முடங்கிப் போன மனநிலையையும் உண்டு பண்ண செய்யும்.

கல்வி கற்றலுக்குரிய பருவம் இளமைப் பருவம் என்பதால் மாணவர்களின் முழுக் கவனமும் கல்வி கற்பதில் இருக்க வேண்டும். முழுக் கவனம் செலுத்தும்படி அவர்களை வலியுறுத்தும் போது கற்றல் என்பது சுமை போலத் தோன்றுகின்றது. சுமை உணர்வு வருவதற்கு காரணம் பரீட்சைக்கு தான் படிக்கிறோம் என்ற எண்ணந்தான் பாடங்களில் உள்ள தகவல்களை புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை விட பரீட்சைக்காக தான் அந்தக் தகவலை மனப்பாடம் செய்து மறந்துவிடாமல் பரீட்சையை எழுதி வெற்றி பெற வேண்டும் என்ற நினைப்பு மேலோங்கி விடுகிறது.

பஞ்சை நீரில் நனைத்தெடுத்தால் அதன் கனம் அதிகமாகிவிடும். அது போல பரீட்சைக் காலம் படித்தாக வேண்டும் என்ற எண்ணம் ஈரமான பஞ்சுப் பொதியாகி கனக்கிறது. இதனால் பரீட்சைப் பதட்டம் வந்து விடுகிறது. பரீட்சையில் வெற்றி பெறுவோமா? அதிக புள்ளி எடுப்போமா? என்ற மனப்பதட்டம் மாணவர்களிடையே காணப்படுகிறது.

### பதட்டம் வரையறை

அதிக துக்கமும் பயமும் தெளிவாக தெரியக்கூடிய நனவிலி நிலையில் தோன்றும் சிக்கலான ஒரு மனவெழுச்சி அனுபவம் பதகளிப்பு என விபரிக்கலாம். பதகளிப்பு ஒரு வகையில் தூண்டியாகவும் இன்னொரு வகையில் அது துலங்கலாகவும் அமைகின்றது. பதகளிப்பு என்பது ஒரு நிலையாகும். அழுத்தம் தரும் ஒரு நிலைக்கான மனவெழுச்சி வெளிப்பாடே பதகளிப்பு எனப்படுகின்றது. பதட்டம் **(ID Ego, Super ego)** ஆகியவற்றிடையே முறுகல் நிலையை ஏற்படுத்திச் செயற்பட வைக்கிறது.

### பதட்டத்தின் வகைகள்

பதட்டம் உள்ளுறுப்புக்கள் உணர்ச்சி வசப்படுவதால் மிக வேதனை தரும் ஒரு அனுபவம். இந்த உணர்ச்சி வசப்படல் உள்ளிருந்து வெளியில் இருந்து வரும் தூண்டல்களால் நரம்புத் தொகுதியில் ஏற்படும். பதட்டம், பய உணர்வு என்பன ஒரே பொருள் கொண்டவை. **Freud** பயம் என்பது வெளியுலகில் உள்ள ஏதோ ஒன்றைப்பற்றியது. ஒருவர் உள்ளுக்குள்ளே உள்ள ஆபத்து பற்றியும் ஒருவர் பதட்டம் அடையலாம். பதட்டத்தை 3 வகையாக பிரித்தார். அவையாவன,

உண்மையான பதட்டம் **(Real Anxiety)**

நரம்பு சம்பந்தமான பதட்டம் **(Neurotic Anxiety)**

ஒழுக்கவியல் சம்பந்தமான பதட்டம் **(Moral Anxiety)**

### உண்மையான பதட்டம் (Real Anxiety)

உண்மையான பதட்டம் என்பது வெளி உலகில் இருந்து ஏற்படக்கூடிய ஒரு ஆபத்தைப்பற்றி ஏற்படும் பதட்டமாகும். இப் பதட்டம் சூழ்நிலைகள் என்பவற்றை கண்டு பயப்படும் தன்மை இருந்திருக்கலாம் அல்லது வாழ்க்கையில் ஏற்பட்ட சம்பவத்தால் ஏற்படலாம். இளவயதில் ஏற்படும் பயம் அதிகமாக இருப்பதற்கு காரணம் அவனுடைய **Ego** வளரவில்லை. ஒருவருக்கு அதிகமாக பதட்டம் ஏற்பட்டு கையாள முடியாத நிலை **(Traumatic)** மன அதிர்வு எனப்படும். ஏனென்றால் அந்த நிலையில் உதவி அந்த குழந்தை போல இருப்பார்கள். சகல பயங்களும் சிறு வயது அனுபவங்களோடு தொடர்புடையன. எனவேதான் சிறுவர்கள் மன அதிர்வு தரும் சம்பவங்களிலிருந்து பாதுகாக்கப்படுவது அவசியம்.

### நரம்பு சம்பந்தப்பட்ட பதட்டம் (Neurotic Anxiety)

நரம்பு சம்பந்தமான பதட்டம் என்பது உள்ளுணர்வுகளால் ஆபத்தை எதிர்நோக்குவதால் ஏற்படும் பதட்டம் ஆகும்.

இது உண்மை நிலைப்பதட்டத்தின் அடிப்படையில் இருந்து ஏற்படும் உணர்சிகள் ஒரு செயலை செய்யத் தூண்டும் போது அவற்றை வெளியே உள்ள ஆபத்தோடு தொடர்புபடுத்தினால் தனது உணர்வுகளுக்கு பயப்பட வேண்டியதில்லை. உணர்வுத்தூண்டலால் ஒருவர் தண்டனை பெற வேண்டி ஏற்பட்டால் அங்கு இந்த உணர்வுத் தூண்டல் எவ்வளவு ஆபத்தானது என்பதை கற்றுக் கொள்வர்.

### ஒழுக்கவியல் சம்பந்தமான பதட்டம் (Moral Anxiety)

ஒழுக்கவியல் சம்பந்தமான பதட்டம் என்பது மனச்சாட்சிகளில் இருந்து வருவதாகும். சிறுவயதில் இருந்து ஒழுக்க நியமங்களை கடைப்பிடிக்கும் போது பிற்காலத்தில் சட்டங்களுக்கு எதிராகப் போகும் போது தடுக்கும். மாறாகப் போகும் போது குற்றவுணர்வு வரும். பதட்ட நிலையை தணிக்கவில்லை என்றால் தர்க்க ரீதியில் நேரடியாக இதைக் கட்டுப்பாட்டில் கொண்டு வரவில்லை என்றால் அது வந்து பாதுகாப்பு பொறிமுறைக்குள் **(Defenece Mechanism)** போகும்.

### பதட்டம் ஏற்படக்காரணங்கள் (Moral Anxiety)

பரீட்சைக்கு தயாராகும் மாணவர்கள் நன்றாக கற்காது விடும் பட்சத்தில் பதட்டம் ஏற்படுகிறது. மேலும் கற்கும் போது பலவற்றை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. படித்தவற்றை மீளவும் ஞாபகத்திற்கு கொண்டு வரும் போது ஞாபகம் வராவிட்டால் பதட்டம் ஏற்படுகின்றது. முழுமையாக கற்றாலும் ஏதோ ஒரு பயம் மாணவரை ஆட்கொள்கின்றது. ஆயத்தம் செய்யாது பரீட்சையை எதிர்கொள்ளும் போது பதட்டம் ஏற்படுகின்றது.

மேலும் சக மாணர்களின் தயார்படுத்தலை நோக்கும் போதும் ஏனைய மாணவர்கள் பதில் அளிக்கும் போதும் தாம் பதில் கூறாது விடும் போதும் மாணவரிடையே பதட்டம் ஏற்படுகின்றது. எல்லாப் பாடத்தையும் கற்க வேண்டும். எவ்வாறு கற்பது, எதை முதலில் படிப்பது போன்ற எண்ணம், சிந்தனையில் குழப்பம் ஏற்படும் போதும் பதட்டம் வருகின்றது. பெற்றோரின் ஒத்துழைப்பு, ஆசிரியரின் ஒத்துழைப்பு சரியாக கிடைக்காத பட்சத்திலும் இது நிகழ்கின்றது.

(அடுத்த வாரம்)

**திருநாவுக்கரசு ஜிந்தாஜினி**
**மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அலுவலகம், யாழ்ப்பாணம்.**

# இந்திர நீல மாணிக்கக்கல்லுக்கு உலக சந்தையில் அதிக விலை

(கொழும்பு)

இலங்கையின் இந்திர நீல மாணிக்கக் கல்லுக்கு உலக சந்தையில் அதிக விலை கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹொங்கொங் நகரில் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற ஏலத்தில் இந்த மாணிக்கக்கல் கரட் ஒன்றுக்கு 36 ஆயிரம் அமெரிக்க டொலர் வீதம் கிடைக்கப் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த மாணிக்கக்கல் 43.16 கரட் எடை கொண்டது. இது 120 இலட்சத்து 84 ஆயிரம் ஹொங்கொங் டொலருக்கு விலை போயுள்ளது. இதன் ஊடாக புதிய உலக சாதனையும் நிலைநாட்டப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் இலங்கையில் இருந்து பெறப்பட்ட மாணிக்கக்கல் ஒன்றே அதிக விலைக்கு விற்பனையானது என்ற சாதனையை இதுவரையிலும் கொண்டிருந்தது. அதனை இந்த மாணிக்கக்கல் முறியடித்துள்ளது.

புதிய உலக சாதனையை ஏற்படுத்தியுள்ள இந்த மாணிக்கக் கல்லை உள்ளடக்கிய மோதிரத்தை வடிவமைத்தவர் பிரித்தானிய அரச குடும்பத்தின் எலிசபெத் டெயிலர் உள்ளிட்ட கிரேஸ் கெனி போன்ற ஹொலிவுட் நடிகைகளின் ஆபரண வடிவமைப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# சிறையிலிருந்து மீண்ட போதும் நான் இன்னும் சிறைக்கைதியே!

## முன்னாள் இராணுவத்தளபதி ஆதங்கம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறையில் இருந்து தாம் விடுதலை செய்யப்பட்டமைக்கான எந்தவொரு ஆவணமும் தமக்கு இன்னும் வழங்கப்படவில்லை என முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதன்படி சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்த நிலையின் பின்னரும் தாம் தொடர்ந்தும் வெலிக்கடை சிறையில் இருப்பதை போன்றே உணர்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட அன்று தமது உடைமைகளை எடுத்துக் கொண்டு சிறைக்கு வெளியே செல்லுமாறு கூறப்பட்டது.

எனினும் அதன்போது விடுதலை தொடர்பில் எவ்வித கடிதங்களும் தமக்கு வழங்கப்படவில்லை.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் தமது விடுதலை குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

எனினும் அந்தப் பேச்சுவார்த்தையின் பிரதிபலன்கள் தமக்கு கிடைக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆதலால் டிரான் அலஸ் உடனான பேச்சுவார்த்தையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது அரசியல் நன்மைக்காக பயன்படுத்திக் கொண்டார் என்பதே உண்மை என்றும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (அ-2)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரி பிரதேச செயலர் பிரிவின் சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றுவலுவுள்ளோர் தின விழா ஜெயபுரம் உப அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஓவியக் கண்காட்சியை பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் பூநகரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.சிறிசெல்வம் ஆகியோர் பார்வையிடுவதையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட சமூகசேவைகள் அதிகாரி வே.தபேந்திரன் மாற்றுவலுவுள்ள ஒருவருக்கு பரிசுப்பொருள் வழங்குவதையும் அருகில் பூநகரி சமூக சேவைகள் அதிகாரி செ.சுரேந்திரா நிற்பதையும் படங்களில் காணலாம்.

செங்குத்தான மலையில் தொற்றி ஏற, முதலில் மெதுவாக நடக்க வேண்டும்.

– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அசோகவனத்துச் சீதை புத்திசாலியாக இருந்தாள்

இராவணனால் கடத்தப்பட்ட சீதை அசோக வனத்தில் அடைக்கப்பட்டாள். அவளைச் சுற்றி அசுரர் கூட்டம். கூடவே வேல், அம்பு, ஈட்டி என்ற ஆயுதங்களையும் அவர்கள் தரித்திருந்தனர்.

திரிசடை என்பாளைத் தவிர மற்றெல்லோரும் சீதையைப் பயமுறுத்துபவர்களே.

நிலைமை இதுவாக இருக்கையில், இராம பிரானின் பக்தன் அனுமன் இலங்கைக்கு வந்து அசோகவனத்தை அடைகின்றான்.

அங்கு சீதையைச் சந்தித்து இராமனின் தூதனாகத் தான் வந்திருப்பதை தெரிவிக்கின்றான்.

மாயமானால் ஏமாந்த சீதை அசோகவனத்தில் தெளிந்த சிந்தனை உடையவளாக இருகின்றாள். தான் எடுக்கின்ற முடிவால் இன்னொரு அபத்தம் ஏற்பட்டுவிடலாகாது என்பதில் அவள் நிதானமாக இருந்தாள்.

அவள் நினைத்திருந்தால் வந்த அனுமனோடு அவள் தப்பிச் சென்றிருக்கலாம்.

ஆனால் அதைச் செய்வதால் அனுமனுக்கு ஆபத்து ஏற்படலாம்.

இராம, இலக்குமணருக்கு அது களங்கமாகலாம்.

தொடர்ந்தும் இலங்கை வேந்தனின் ஆக்கிரமிப்பும் சீண்டலும் இருக்கலாம்.

ஆகையால் அனுமனோடு தப்பித்துச் செல்வதை அவள் விரும்பவில்லை.

இராம சேனை இலங்கைக்கு வந்து இராவண சேனையை அழித்து இராமன் விரும்புகின்றவனிடம் இலங்கையின் ஆட்சியை ஒப்படைத்த பின்பு தனக்கு விடுதலை கிடைப்பதே உண்மையான – நிம்மதியான விடுதலை என்று சீதை நினைத்தாள். அந்த நினைப்பில் நிறையவே அர்த்தமுண்டு.

ஆம். அசோகவனத்து சீதையின் நிலைமை தான் ஈழத் தமிழ் மக்களின் இன்றைய நிலைமை.

சீதைக்கு திரிசடையாவது துணை நின்றாள். நமக்கு ஐ.நாவும் துணை இல்லை.

எனவே மிகவும் நிதானமாக – புத்திசாலித்தனமாக –அரசியல் இராஜதந்திர வியூகத்தோடு எங்களுக்கான எதிர்காலத்தை நோக்கி நாங்கள் நகர வேண்டும்.

குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் எங்களின் சமகால நிலைமையை தெளிவாகப் புரிந்துகொண்டு செயலாற்ற வேண்டியது மிகவும் முக்கியமானதொன்று.

இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள்தான் தமிழ் மக்களின் ஒரு பலமான சக்தி.

எனவே அந்த சக்தியை வலுவிழக்கச் செய்வதில் அசோகவனத்துக் காவலர்கள் விழிப்பாக இருப்பார்கள்.

ஆகவே, நீங்கள் உணர்ச்சிவசப்படாமல் நடந்து கொள்ளுங்கள். உங்கள் இழப்பில் இலாபம் தேடுவதில் எங்களிடமும் பலர் உள்ளனர்.

அதோ! வீட்டின் கதவோரமாக நின்று கண்ணீர் விடுகின்ற உங்கள் தாயை –உங்களால் தன் குடும்பப் பாரம் குறையும் என்று கனவு காணும் உங்கள் தந்தையை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்.

# பாதணிகளுடன் உள் நுழைய வேண்டாம்

## ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் புதிய நடைமுறை–மக்கள் விசனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலைக்குள் செல்லும் பொது மக்களை பாதணிகளை கழற்றிவிட்டு உள்ளே வருமாறு தாதியர் கூறுவதாக நோயாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த வைத்தியசாலையில் 27 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 19 ஆயிரம் குடும்பங்கள் சிகிச்சை பெற்று வருகின்றன.

இவ்வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளிகளை அங்கு கடமை புரியும் தாதியர்கள் பாதணிகளை கழற்றி விட்டு வருமாறு பணிக்கின்றனர்.

அவ்வைத்தியசாலைக்கு செல்லும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் வைத்தியர்களை இவ்வாறு கூறாது பொது மக்களை மட்டும் கூறுவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஏனையவைத்தியசாலைகளில்இவ்வாறான நடைமுறை இல்லையெனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, உரியதரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

## சிறு தவறிழைத்தோருக்கு பெரும் தண்டனை கொடுப்பதா?

### சுரேஷ் எம்.பி. கேள்வி

(கொழும்பு)

பெருமளவான தமிழீழ விடு தலைப் புலி சந்தேக நபர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களிற்கான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் எனவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சில அமைச்சுக்களிற்கான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதம் நேற்றைய தினம் பாராளுமன்றில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், விடுதலைப்புலி சந்தேக நபர்கள் நீண்டகாலமாக எவ்வித விசாரணையும் நடைபெறாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

ஆனால் கே.பி என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் போன்றவர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். சிறு தவறுகளிற்காக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் 15 வருடத்திற்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்தார். (அ-2)

## வெளிநாட்டு பணிப்பெண்கள் தொடர்பில் கவனம் வேண்டும்

### ரஞ்சன் ர்ாமநாயக்க எம்.பி.கோரிக்கை

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைப் பெண்களின் பாதுகாப்பு குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் ப்ராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்

சில அமைச்சுகளிற்கான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதம் நேற்றைய தினம் பாராளுமன்றில் நடைபெற்றது

இதில் புனர்வாழ்வுக்ள் மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு ,வெளிநாட்டு வேலை வாய்ப்புக்ள் ஊக்குவிப்பு ஆகிய அமைச்சுக்களிற்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்தான குழு நிலை விவாதமே இடம் பெற்றுள்ளது


இந்தவிவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராம நாயக்க வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைப் பெண்களின் பாதுகாப்புக் குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும் இது குறித்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் திருப்தியளிக்கவில்லை எனவும் குறிப்பிட்டார். (அ-2)

## சத்திய தரிசனம்



உன் மேல் நீ வைத்திருக்கும் நம்பிக்கை போன்று இறைவனிடமும் நம்பிக்கை வை. இதுதான் உயர்வின் இரகசியம். நீயே கடவுள். கடவுளே நீதான். நீ என் சந்தேகங்களுக்கு இடமளிக்கவேண்டும்? சந்தேகங்கள் உன்னை அழித்துவிடும். ஆகவே சந்தேகங்களை விட்டுவிடுங்கள். சத்தியத்தின் பாதையில் நடந்து தெய்வீகத்தை உணர்ந்து அனுபவியுங்கள். இதுதான் உண்மையான சாதனை. உண்மையான ஆன்மீகம்.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



## உட்கார்ந்த நிலையில் உணவருந்த வேண்டும் என்பது ஏன்?

உணவருந்தும் கலாசாரம் மாறிவர இன்று நம் நாட்டில் நடந்தும் நின்று கொண்டும் உணவருந்துகின்றோம். குழந்தைகளுக்கும் அவ்வாறே உண்ணப் பழக்குகின்றோம்.

சாணம் பூசிய தரையில் பனையோலைத் தடுக்கில் சப்பணமிட்டு உட்கார்ந்து முன்பக்கப் பார்வையுடன் உணவருந்த வேண்டும் என்பது தொன்றுதொட்டுள்ள பழக்கம், தரையில் பல கையிட்டு அதில் சப்பணமிட்டு அமர்ந்தும் நம் நாட்டினர் உணவருந்துகின்றனர்.

சப்பாத்துக்களைக் கழற்றாமல் காலின்மேல் கால்வைத்து சாப்பாட்டு மேசைக்கு முன்னிலிருந்து தொலைக்காட்சி நிகழ்ச்சியை ரசித்துக்கொண்டே உணவருந்துவதை விட நம் முன்னோர்கள் பாணி அழகுள்ளது. அவ்வாறு அமர்ந்து உண்பதில் உடலுக்குச் சில பலன்கள் உள்ளதாக நம் முன்னோர்கள் அறிந்திருந்தனர்.

ஆனால் சுகபோகங்களின் நடுக்கடலில் அலைந்து திரியும் நவீன மக்கள் இந்த வாழ்க்கை இறைவன் அருளியது என்பதை உணர்வதில்லை.

நாம் உணவருந்தும் போது உடலின் முட்டுக்களில் அசைவு ஏற்படுகின்றது என்று இன்றைய சாஸ்திரம் அறிவிக்கின்றது. இந்த அசைவு முட்டுக்களுக்கு அதிகபாரம் உண்டாக்கும். அமர்ந்தநிலையில் உணவருந்தினால் இந்தப் பாரத்தைக் குறைக்க் இயலும்.

மேலும் நின்று கொண்டு உணவருந்தினால் மிதமிஞ்சி உணவருந்த வாய்ப்புண்டு. அதிகமாக உண்ணுவதும் உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் என்பதும் நாம் அறிவோம். வயிறு நிரம்ப [illegible] நோய்களிலிருந்தும் விலகியிருப்பார்கள் என்று மருத்துவத்துறை பல வழியில் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் கார்க்குண்டு தாக்குதல்; 30 பேர் சம்பவ இடத்திலேயே பலி

(தெஹிரான்)

ஈராக் ஹிரியா பகுதியில் உள்ள மசூதியின் அருகே நேற்று முன்தினம் மாலை திடீரென்று ஒரு கார்க் குண்டு வெடித்தது. இதில் 9 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். 20 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த சம்பவம் நிகழ்ந்த சில நிமிடங்களில் கயரியேட் மசூதி அருகேயும் கார்க்குண்டு வெடித்தது. இதில் 5 பேர் உயிரிழந்தனர்.

மூன்றாவதாக வடக்கு பக்தாத் ஹிலா என்ற இடத்தில் உள்ள மசூதி அருகே மீண்டும் ஒரு கார்க்குண்டு வெடித்ததில் 7 பேர் பலியாகினர். 21 பேர் படுகாயம் அடைந்தனர்.

பல்வேறு இடங்களில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவங்களில் 30 பேர் பலியாகியுள்ளனர். 50 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்த தாக்குதல்கள் சில வருடங்களுக்கு முன் ஈராக்கில் காணப்பட்ட பயங்கரமான இருண்ட காலத்தை நினைவுபடுத்துவதாக பக்தாத் வாசி ஒருவர் கூறினார்.

பக்தாத் நகரில் உள்ள ஷியா மசூதிகளை குறிவைத்து குண்டு வெடிப்பு சம்பவங்கள் அவ்வப்போது நிகழ்ந்து வருகின்றன. (அ-2)

# 144 கிலோமீற்றர் வேகத்தில் ஜப்பானில் பனிப்புயல் வீசியது



ஜப்பானில் பனிப்புயல் வீசியதால் 40 ஆயிரம் வீடுகள் இருளில் மூழ்கியுள்ளதாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பசுபிக் கடற்கரையோரத்தில் உள்ள ஹொகைடா தொழில்நகரில் முரோரன் பகுதியில் மணிக்கு 144 கிலோமீற்றர் வேகத்தில் புயல்காற்று வீசியுள்ளது. இதனால் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் இருளில் மூழ்கின. வீதிகள் அனைத் தும் பனி கொட்டி இருப்பதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

மின்கம்பிகள் பலத்த சேதமடைந்ததுடன் பல பகுதிகள். இருளில் மூழ்கின. மின்விநியோகத்தை சீர்ப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.தகவல் தொடர்பு கோபுரங்கள் சாய்ந் துள்ளதால் மொபைல் போன் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது. புயலால் 90 புகையிரதங்கள், 10 உள்ளூர் விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# செவ்வாயில் 20 ஆண்டுகளுக்குள் 80 ஆயிரம் பேர் குடியேறுவர்

## ஸ்பேஸ்எக்ஸ் நிறுவன அதிகாரி அறிவிப்பு

செவ்வாய் கிரகத்தில் குடியேற அனைத்து நடவடிக்கைகளையும் மக்கள் மேற்கொண்டு வருவதாக ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

பூமியை சுற்றிவரும் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு முதன் முறையாக பொருட்களை விண்கலத்தில் ஏற்றிச் சென்று ஸ்பேஸ்எக்ஸ் சாதனை படைத்தது.

இந்நிலையில் செவ்வாய் கிரகத்துக்கு ஆட்களை ஏற்றிச் செல்லும் திட்டம் குறித்து அறிவிப்பை வெளியிட்டுள்ளது எக்ஸ்பேஸ் எக்ஸ் இது தொடர்பாக லண்டனில் உள்ள றோயல் ஏரோ நாட்டிக்கல் சங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரி எலான் மஸ்க் கூறுகையில்,

முதல்கட்டமாக 10 பேரை மட்டும் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளோம். பின்னர் படிப்படியாக அதிகளவிலானோர் அழைத்துச் செல்லப்படுவர் இதற்கான கட்டணம் 5 இலட்சம் அமெரிக்க டொலர்கள் என நிர்ணயித்துள்ளோம்.

முன்னேறிய நாடுகளில் உள்ள நடுத்தர வயதினர் அதிகளவில் இப்பயணத்துக்கு முன்வர வேண்டும் என்பதற்காக கட்டணத்தை குறைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

செவ்வாய் கிரகத்தில் செங்குத்தாக தரையிறங்கக்கூடிய விண்கலங்களை தயாரிக்க வேண்டும். அத்துடன் விண்கலங்கள் மீண்டும் மீண்டும் பயணத்துக்கு பயன்படுத்த வேண்டும். இந்த வசதிகளுடன் பால்கன் 9 விண்கலத்தை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

செவ்வாய் கிரகத்தில் சூரிய ஒளி தாக்காத வகையில் குடியிருப்புக்களை ஏற்படுத்துதல், பிராண வாயுவை செயற்கையாக உருவாக்கும் கருவிகளை நிறுவு தல், உறைந்து கிடக்கும் பனிக்கட்டிகளை தேடிக் கண்டறிந்து குடிநீராகப் பயன்படுத்த முயற்சித்தல் உள்ளிட்ட பணிகளில் அனைவரும் ஒருங்கிணைந்து ஈடுபட வேண்டியதிருக்கும்.

செவ்வாய் மண்ணில் பயிர் உற்பத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகளும் ஆராயப்படும். அங்கு குடியேறுவோர் சுயசார்புள்ள புதிய நாகரிகத்தை உருவாக்குவார்கள்.

அடுத்த 20 ஆண்டுக்குள் செவ்வாயில் 80 ஆயிரம் பேரை குடியேற்றத் திட்டமிட்டுள்ளோம் என்று தெரிவித்துள்ளார். (அ-2)

# அந்தாட்டிக்கா பிரதேசத்தில் வேற்றுக்கிரகவாசிகள்?

அந்தாட்டிக்கா பிரதேச ஏரிகளில் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் வேற்று கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கு சாத்தியம் உள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தாட்டிக்கா கண்டத்தில் சீரோ டிகிரிக்கும் குறைவான வெப்பநிலை உள்ள ஏரிகளில் படிந்துள்ள உப்பில் நுண்ணுயிர்கள் வளர்வதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இங்குள்ள ஏரிகளில் மைனஸ் 13 டிகிரி சீதோஷண நிலை உள்ளது. இந்த ஏரிகளின் அடிப்புறம் உள்ள இருண்ட பகுதிகளில் சிறிய வண்டுகள் வாழ்ந்து வருதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த ஏரியில் உள்ள பனிக் கட்டிகளில் கடல் நீரில் காணப் படும் உப்பைக் காட்டிலும் 6 மடங்கு உப்புத்தன்மை அதிகமாக இருக்கிறது.

இங்குள்ள வெவ்வேறு ஏரிகளில் வெவ்வேறு உப்புத்தன்மை காணப்படுவது புதுமையான ஒன்று என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த கண்டுபிடிப்பின் மூலம் சூரிய மண்டலத்தில் உள்ள பனிக் கட்டிகளாலான ஏனைய நிலவுக் கோள்களில் கூட உயிர் கள் வாழ்வதற்கான அறிகுறிகள் உள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கருத்து கூறுகின்றனர். (அ-2)

# குழியிலிருந்து 19 பேரின் உடல்கள் கண்டெடுப்பு

(மெக்சிக்கோ)

மெக்சிக்கோ நாட்டின் அமெரிக்க எல்லையை ஒட்டி அமைந்துள்ள சிகுவாகுவா பகுதி போதைப் பொருள் கும்பலின் வன்முறை தாண்டவமாடும் இடம் என்று சொல்லப்படுகிறது.

இங்கு ஆள் நடமாட்டம் அதிகம் இல்லாத ரோசேல்ஸ் என்னுமிடத்தில் பெரிய குழி ஒன்றில் புதைக்கப்பட்டிருந்த 19 பேரின் உடல்களை அதிகாரிகள் கண்டெடுத்துள்ளனர்.

இதில் 11 பேரின் உடல்கள் இரண்டு வருடங்களுக்கு முன்பும் 8 பேரின் உடல்கள் சில தினங்களுக்கு முன்பும் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. சுட்டுக்கொல்லப்பட்டுள்ள அனைவரும் ஆண்கள்.

மெக்சிக்கோவில் காணாமல் போன 24 ஆயிரம் பேரில் 16 ஆயிரம் பேரின் உடல்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்பட முடியவில்லை.

போதைப்பொருள் கும்பல்களுக்கும் மற்றும் இராணுவத்துக்கும் இடையில் நடந்த சண்டையில் கொல்லப்பட்டவர்கள் என்றும் கூறப்படுகிறது. (அ-2)

# சிரிய நாணயத்தாள்கள் ரஷ்யாவில் அச்சிடப்பட்டன




ரஷ்யாவிலிருந்து சிரியாவு க்கு விமானம் மூலம் 240 தொன் நாணயங்கள் அச்சிடப் பட்டு விநியோ கம் செய்யப்பட்டுள்ளன.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராக கடந்த 20 மாதங்களாக போராட்டம் நடந்து வருகிறது.

இந்நிலையில் சிரிய நாட்டின் நோட்டுக்கள் ஐரோப்பிய நாடான ஆஸ்திரியாவில் அச்சடிக்கப்பட்டு வந்தன. ஆனால் , சிரியா மீது விதிக்கப்பட்ட பொருளாதார தடை காரணமாக ஆஸ்திரியா நாணயங்களை அச்சடிக்க மறுத்து விட்டது. இதையடுத்து ரஷ்யாவில் சிரிய நாணயங்கள் அச்சடிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அச்சடிக்கப்பட்ட 240 தொன் எடையுள்ள சிரியா நாணயங்கள் சிரிய நாட்டின் விமான படை விமானங்கள் மூலம் ரஷ்ய தலைநகர் மொஸ்கோவிலிருந்து எட்டு முறை சிரியாவுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே ரஷ்யாவிலிருந்து சிரிய அரசுக்கு ஆயுதங்கள் விநியோகிக்கப்படுவதாக கூறப்பட்டதால் விமானங்கள் அனைத்தும் எகிப்தில் தரையிறக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கருணாநிதி படிப்பறிவில்லாதவர்; விமர்சிக்கிறார் சுப்பிரமணியசுவாமி


தி.மு.க. தலைவர் கருணாநிதி படிப்பறிவில்லாதவர் என்றும் தி.மு.கவினர், சினிமாக்காரர்கள் என சுப்பிரமணியம் சுவாமி விமர்சித்துள்ளார்.

2 ஜி அலைக்கற்றை ஊழலில் அரசுக்கு இழப்பு ஏற்பட்டதாக கூறப்படும் தொகை குறித்து தி.மு.க. தலைவர் கருணாநிதி விமர்சனம் செய்திருந்தார்.

அதாவது அண்மையில் நடத்தப்பட்ட 2 ஜி ஏலத்தில் அரசுக்கு வெறும் 9 ஆயிரம் கோடி ரூபா வருவாய் கிடைத்துள்ளது.

எனவே, 2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் பல இலட்சம் கோடி இழப்பு ஏற்பட்டதாக கூறும் சிஏஜி அறிக்கை தவறானது என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணியம் சுவாமி 2 ஜி குறித்து தி.மு.க. விவாதித்தால் அவர்கள் அனைவரும் கழுதைகளாகி விடுவார்கள். ஏனென்றால் தி.மு.கவினரெல்லாம் சினிமாக்காரர்கள். அதிலும் கருணாநிதி படிப்பறிவில்லாதவர் என்றார். (அ-2)



திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் [illegible] ஏற்றப்பட்டது. உள்படத்தில் மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்பட்டிருப்பதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழகச் சூழலில் நேற்று...





கண்டனப் பதாகைகளுடன் மாணவர்கள்...



மௌன வணக்கம்...



நிலைமையை அவதானிக்கும் ஊடகவியலாளர்கள்



மாணவர்களுடன் பொலிஸார் முறுகல்



பேரணியாய்...



பொலிஸ் பிடியில் சிக்கியுள்ள மாணவர்கள்.






சிக்கி சின்னாபின்னமாகும் மாணவன்...



மாணவர்களை துவம்சம் செய்யும் பொலிஸாரும் படையினரும்...



படங்கள்: அலுவலகச் செய்தியாளர்கள்




பிரதேசத்தில் இராணுவம் குவிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னணி வீரர்கள் சொதப்பல் வெற்றி அருகில் நியூசிலாந்து



இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும் இலங்கை அணிக்குமிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2 ஆவது போட்டியின் 4ஆம் நாள் ஆட்டம் நேற்றாகும். நேற்றைய நாள் முடிவில் நியூசிலாந்து அணிக்கு வெற்றிவாய்ப்புகள் பிரகாசித்துள்ளது.

6 விக்கெட்டுக்களையிழந்து 225 ஓட்டங்களே பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாள் ஆட்டத்தை ஆரம்பித்த இலங்கை அணி 244 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்துள்ளது.

இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்படுத்தாடிய நியூசிலாந்து அணி 9 விக்கெட்டுக்களையிழந்து 194 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் தனது ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

363 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடத் ஆரம்பித்த இலங்கை அணி நேற்றைய நாள் முடிவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 47 ஓட்டங்களைப் பெற்று தடுமாறிவருகிறது. இதன்படி 6 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இலங்கை அணி 316 ஓட்டங்களைப் பெற வேண்டியுள்ளது.

## பொலிஸார் மூர்க்கம்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது இராணுவத்தினரும் கலகம் அடக்கும் பொலிஸாரும் மூர்க்கத்தனமாக தாக்குதலை மேற்கொண்டதோடு ஊடகவியலாளர்களையும் பொது மக்களையும் அச்சுறுத்தி பல்கலைக் கழக சூழலில் போக்குவரத்தையும் பல மணி நேரம் தடை செய்தனர்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள்ளும் அதனையண்டிய மாணவர் விடுதிகளிலும் தீபங்கள் ஏற்றி மாணவர்களால் மாவீரர்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது அத்துமீறி நுழைந்த பெருமளவான இராணுவத்தினரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் ஆயுதங்களைக் காட்டி மாணவர்களை எச்சரித்ததோடு பெண்கள் விடுதிக்குள்ளும் அத்துமீறி அநாகரிக மாக நடந்து கொண்டனர்.

இதனைக் கண்டிக்கும் வகையில் நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களினால் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

முற்பகல் 11 மணியளவில் பல்கலைக்கழக நுழைவாயில் முன்பாக ஒன்றுகூடிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இராணுவத்தினருக்கு எதிராக கோஷமிட்டதோடு பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கு எதிராகவும் கருத்துக்களை முன்வைத்தனர்.

பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலின் கதவினை மூடியவாறு முகத்தினை கறுப்புத் துணியால் கட்டிக் கொண்டு மாணவர்கள் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தியதுடன் அஞ்சலி உரையையும் நிகழ்த்தினர்.

ஆர்ப்பாட்டமும் கண்டனக் கூட்டமும் முடிவுற்ற பின்னர் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக உள்ள இராமநாதன் வீதியில் மாணவர்கள் கண்டனப் பேரணியாகச் சென்றனர்.

இதன்போது கனரக வாகனம் ஒன்றில் பெருமளவான கலகம் அடக்கும் பொலிஸார் அழைத்துவரப்பட்டு அப்பகுதியில் குவிக்கப்பட்டிருந்தனர்.

அத்தோடு மூன்று ஜீப் வண்டிகளில் இராணுவத்தினரும் ஆயுதங்களுடன் இராமநாதன் வீதியில் வந்திறங்கி நின்றனர்.

மாணவர்களின் பேரணி வீதியில் சிறிது தூரம் சென்றதும் திடீரென வந்து இடைமறித்த யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி குணசேகரா, மாணவர்களை கலைந்து செல்லுமாறு கடும்தொனியில் எச்சரித்தார்.

மாணவர்கள் பொலிஸாருடன் பேசிக் கொண்டிக் கொண்டிருந்த போது உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரியினால் கலகம் அடக்கும் பொலிஸாருக்கு மாணவர்களை அடித்து கலைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

இதன்போது மாணவர்கள் மீது கலகம் அடக்கும் பொலிஸார் கண்மூடித்தனமாக தாக்குதலை மேற்கொண்டனர். ஆண்கள், பெண்கள் என வேறுபாடு காட்டாது அனைவரின் மீதும் பொலிஸார் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதன்போது மாணவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். இதனை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட இராணுவத்தினரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் மாணவர்களை கலைத்துப்பிடித்து காட்டுமிராண்டித்தனமாக தாக்குதலை நடத்தினர்.

இதன்போது மாணவர்கள் மீதான தாக்குதலை கமரா மூலம் பதிவு செய்த ஊடகவியலாளர்களையும் இராணுவத்தினரும் பொலிஸாரும் தாக்க முற்பட்டதோடு அவர்களை எச்சரிக்கும் வகையிலும் செயற்பட்டனர்.

இதில் சில ஊடகவியலாளர்கள் தாக்குதலுக்கும் உள்ளானதோடு அவர்களது கமராக்களும் பறிக்கப்பட்டன. பின்னர் அதிலிருந்த புகைப்படங்கள் அழிக்கப்பட்டு மீளவும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் மாணவன் ஒருவன் இராணுவத்தினரால் மிகவும் மோசமாக தாக்கப்பட்டார்.

அத்தோடு பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றிய செயலாளர் ப.தர்சானந்த் மீது கல்லெறித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதோடு 40 மேற்பட்ட மாணவர்கள் மீது கலகம் அடக்கும் பொலிஸாரும் இராணுவத்தின[illegible] தடியடித்தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்தத்தாக்குதல் சம்பவத்தையடுத்து இராமநாதன் வீதியை (பல்கலைக்கழகம் [illegible]ாக) தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்த இராணுவத்தினர் அவ்வீதியூடான போக்குவரத்தையும் பல மணிநேரம் தடுத்து நிறுத்திய தோடு பொது மக்களையும் பயமுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர்.

மாணவர்கள் மீதான தாக்குதலையடுத்து பல்கலைக்கழகத்தை அண்டிய பகுதியில் நேற்று மாலை வரை ர்ணகளமாகக் காட்சியளித்தது. (எ-4,6)

## புலிகளின்...

யுள்ளார்.

இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கே.பியிடம் நடத்திய விசாரணைகளின் போது அவர் இந்த சொத்து விபரங்கள் தொடர்பான தகவல்களைவெளியிட்டுள்ளார்.

கனடா, சுவிட்சர்லாந்து, மலேசியா, பிரித்தனியா, நோர்வே, பிரான்ஸ், சுவீடன், ஜேர்மனி ஆகிய நாடுகளில் இந்தச் சொத்துக்கள் இருக்கின்றன. இவற்றில் அதிகளவான சொத்துக்கள் கனடாவில் உள்ளன.

பல்பொருள் அங்காடிகள், உணவகங்கள், வாகன விற்பனை நிலையங்கள், லீசிங் நிறுவனங்கள் எனப் பல்வேறு வர்த்தக நிலையங்கள் இந்த சொத்துக்களில் அடங்குவதாக தெரியவந்துள்ளது.

இந்த வர்த்தக நிறுவனங்கள் விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர்களின் பெயர்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. 30 வீதமான சொத்துக்களின் பங்குகள் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான அமைப்புகளுக்கு கிடைப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. (எ-11)

## அனுமதியின்...

கலைப்பதற்காக சென்ற பொலிஸாரின் ஒத்துழைப்புக்காகவே இராணுவமும் அப்பகுதிக்குச் சென்றது என்று யாழ்.இராணுவத்தலைமையகம் கூறியுள்ளது. (எ-11)

## யாழ்தேவி...

அளவில் இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

முச்சக்கரவண்டியில் பயணித்த 4 பெண்கள் மற்றும் 2 ஆண்களே இவ்வாறு பலியானதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரிசாந்த ஜயக்கொடி தெரிவித்தார். சம்பவத்தில் படுகாயமடைந்த பாதசாரியொருவர் குருநாகலை மருத்துவமனையில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

முச்சக்கரவண்டி வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையே விபத்துக்கு காரணம் என்று ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது. (எ-11)

## தாக்குதலை கண்டித்...

மடைந்துள்ளனர். யாழ்பல்கலைக்கழகத்தின் ஆண்கள் விடுதிக்குள்ளும் பெண்கள் விடுதிக்குள்ளும் கதவுகளை உடைத்து பலாத் காரமாக உள்நுழைந்த இராணு வத்தினர் மாணவர்களதும், மாணவிகளதும் தலைகளில் துப்பாக்கிகளை வைத்து கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். மேலும் விடுதியின் கதவுகளையும், சொத்துக்களையும் உடைத்து சேதப்படுத்தியுள்ளனர்.

இந்த சம்பவத்தைக் கண்டித்து நேற்றைய தினம் மாணவர்கள் அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போர்ாட்டம் ஒன்றினை மேற்கொண்ட வேளையில் அவ்விடத்தில் குவிக்கப்பட்டிருந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் துப்பாக்கிப் பிடிகளாலும், இரும்புக் கேபிள்களாலும், பொல்லாங்கட்டைகளாலும் மாணவர்கள் மீது ஈவிரக்கமற்ற தாக்குதலை நடத்தியுள்ளனர்.

காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் அகப்பட்ட மாணவிகளில் ஒருவர் அந்த இடத்திலேயே மயங்கி வீழ்ந்தபோது, வீழ்ந்த மாணவியை கால்களாலும் கொட்டன்களாலும் தொடர்ந்தும் தாக்கியுள்ளனர். இத்தாக்குதலில் ஐம்பதிற்கும் மேற்பட்ட மாணவர்களும் மாணவிகளும் காயமடைந்துள்ளனர்.

கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை கலைந்து செல்லுமாறு இராணுவத்தினரோ அல்லது பொலிஸாரோ எவ்வித முன்னறிவித்தலும் வழங்காமலேயே மாணவர்கள் மீதான கொலை வெறித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இராணுவத்தினரும் பொலிஸாரும் கூட்டாக மேற்கொண்ட இக்காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை தமிழ்த் தேசியமக்கள் முன்னணி மிகவும்வன்மையாகக் கண்டிக்கின்றது.

இளம் சமூகத்தினர் எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகள், அந்த வகையில் பல்கலைக் கழக மாணவர்களின் பங்கு தேசத்தின் வளர்ச்சியில் மிக முக்கியமானது. அவர்களது உரிமைகள் மீறப்படும்போது, அவர்களது சுதந்திரமும் பறிக்கப்படுகின்ற போது அவர்களோடு துணை நிற்க வேண்டியது சமூகத்தின் கடமையாகும்.

இத்தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து எதிர்வரும் 4-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை யாழ்.பஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள சோமசுந்தரப் புலவர் சிலையருகில் கண்டனப் போராட்டம் ஒன்றினை நடத்துவதென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது. இப்போராட்டத்தில் அனைவரையும் கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறு வேண்டுகின்றோம் என்றுள்ளது. (எ)

## 2 மாணவிகள் உட்...

தைச் சேர்ந்த இரு மாணவிகளும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலில் காயமடைந்தவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதனால் வைத்தியசாலையிலும் இராணுவப் புலனாய்வாளர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டது.

யாழ்.போதனாவில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் சில ஊழியர்களூடாக இராணுவப் புலனாய்வாளர்கள் காயமடைந்தவர்கள் பற்றிய தகவல்களினை திரட்டிச் சென்றனர்.

இதேவேளை காயமடைந்தவர்களினை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பொதுச்செயலாளருமான எஸ்.கஜேந்திரன், சட்டத்தரணி மணிவண்ணன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு நிலைமைகளையும் கேட்டறிந்தனர். (எ-6)

## வலம்புரிச்...

இச் சம்பவத்தின் போது வேறு சில ஊடகவியலாளர்களும் படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந)

## தீபம் ஏற்...

மேற்றுவதனை அனுமதிக்காததனை பொது மக்கள் சிலர் இராணுவத்தினரிடம் பத்திரிகைகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்[illegible] கூறியுள்ளாரே கார்த்திகைத்தினத்தில் அனைவரும் தீபம் ஏற்றலாம் என்று கூறியுள்ளனர்.

எனினும் அதற்கு நாங்கள் சொல்லுவதனைக் கேளுங்கள் மூன்று நாட்களுக்கு யாரும் விளக்கேற்றக் கூடாது அவ்வாறு ஏற்றினால் நடப்பது வேறு என படையினர் மிரட்டிச் சென்றுள்ளனர்.

5 மோட்டார் சைக்கிளில் வந்த சீருடை அணிந்த இராணுவத்தினராலேயே இவ்வாறு தாங்கள் மிரட்டப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர். (எ-11)

## யாழ்.பல்...

பாதுகாப்பையும் கருதியுமே வகுப்பு பகிஷ்கரிப்புத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

இதனால் தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு வகுப்பு பகிஷ்கரிப்பினை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அலுவலகம்நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை உடைக்கப்பட்டுள்ளதாக மாணவர் ஒன்றியத்தினர் குறிப்பிட்டனர்.

இதன் போது, குறித்த அலுவலகத்தில் காணப்பட்ட பெறுமதியானப்பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-4,6,11)


**மாபெரும் கருத்தரங்கு**

GAQ பேராதனை

வரலாறு : S.Sதாஸ் B.A. (hons)

01. 02/12/2012 சனி. ஞாயிறு 9.00 - 12.00

ஆரம்பம் : 01.12.2012 சனி 9 am

தொடர்பு: தொ.பே: 0771753838

பதிவுகளை மேற்கொள்ளவும்.

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

57/18 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(இலங்கை வங்கி முன்பாக)

(1059)



**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

**யாழ்.பிரெஞ்சு நட்புறவுக் கழகம்**

The Only Official Centre for French Language in Jaffna

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

Alliance Francaise de Paris ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் Alliance Francaise De Jaffna மட்டுமே. சர்வதேச தரம் வாய்ந்த Alliance Francaise De Jaffna இல் France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.

வகுப்புகள்: சனி, ஞாயிறுகளில்

*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பமாகின்றன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.*

61 Kachcheri - Nallur Road, Jaffna. Phone : 021 222 8093

E-mail: alliancejaffna@yahoo.com

(1058)

(ரகா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ளது)



**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள மூன்று சில்லு மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு

தொடர்பு: கொத்தன்தறை, பொலிகண்டி கிழக்கு.

0779068233, 0779546360

(1054)



**வீடு விற்பனைக்கு**

கச்சேரி கிழக்கு வீதிக்கு அருகாமையில் சகல வசதியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0775671965

(1060)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org